திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**காந்திகிராம பல்கலைக்கழகத்தில் தேசிய அளவிலான கருத்தரங்கம்**

First Published : 13 Feb 2010 04:47:52 AM IST
Last Updated : 13 Feb 2010 10:04:12 AM IST

திண்டுக்கல், பிப். 12: காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம் சார்பில் இமேஜ் பிராசசிங் குறித்து தேசிய அளவிலான கருத்தரங்கம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கருத்தரங்கினைத் தொடங்கிவைத்து காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சோம.ராமசாமி பேசியதாவது:

பல்கலைக்கழக மானியக் குழு நிதி உதவியுடன் இமேஜ் பிராசசிங் குறித்த தேசிய அளவிலான கருத்தரங்கம் நடத்தப்படுகிறது. இந்தத் தொழில்நுட்பம் பல்வேறு துறைகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கு பெரிதும் உதவுகிறது.

மருத்துவம், பாதுகாப்பு, பொழுதுபோக்கு, கடல்நீரில் ஏற்படும் எண்ணெய்க் கசிவைக் கண்டறிதழ், பூமியில் தாதுவளம் போன்றவற்றுக்கு உதவுகிறது. மேலும் விவசாயத்துறையில் பூச்சிகளால் ஏற்படும் தாக்குதலைக் கண்டறியவும் இது உதவுகிறது என்றார் துணைவேந்தர் சோம.ராமசாமி.

பல்கலைக்கழக கணினித் துறை தலைவர் சோமசுந்தரம், அமிர்தானந்தமயி கல்வி நிறுவனப் பேராசிரியர் கலிமால் ஆகியோர் சிறபபுரை ஆற்றினர். கருத்தரங்கில் நாடு முழுவதும் இருந்து 70 பேர் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரைகள் புத்தக வடிவில் தயாரிக்கப்பட்டது.

இதனை துணைவேந்தர் வெளியிட்டார்.

**வேளாண் காடுகள் மேம்பாட்டுக்கு இணையதளம்**

First Published : 13 Feb 2010 03:16:32 AM IST

கோவை, பிப்.12: தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின்கீழ் தொழிற்சாலை சார்ந்த வேளாண் காடுகள் மேம்பாட்டுக்கான புதிய இணையதளத்தை வேளாண் பல்கலைக்கழகம் துவக்கியுள்ளது.

வேளாண் புதுமைத் திட்டம் தமிழகத்தில் 5 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக காகிதம், தீக்குச்சி தொழிற்சாலைகளுக்கு தேவையான மரங்களை குளோனல் முறையில் உற்பத்தி செய்து மாதிரிப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன.

திட்டத்தின் செயல்பாடுகள், செயல்படுத்தப்படும் தொழிற்சாலைகள், பயனாளிகள், புதிய தொழில்நுட்பங்கள், சந்தை தகவல்கள் பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்ளும் வகையில் புதிய இணையதளம் (ஜ்ஜ்ஜ்.ச்ஸ்ரீழ்ண்ய்ஹண்ல்.ர்ழ்ஞ்) துவங்கப்பட்டுள்ளது.

இந்த இணையதளத்தில் விவசாயிகள், மரம்சார்ந்த நிறுவனங்களுக்குத் தேவையான அதிநவீன தொழில்நுட்பங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வேளாண் பல்கலை. துணைவேந்தர் ப.முருகேசபூபதி இந்த இணையதளத்தை துவக்கி வைத்தார்.

### ஏழை விவசாயிகளுக்கு நிலம் கோரி சென்னையில் பிப்.22ல் ஆர்ப்பாட்டம்

First Published : 13 Feb 2010 02:12:00 AM IST

வேலூர், பிப். 12: ஏழை விவசாயிகளுக்கு நிலம், நடைபாதைவாசிகளுக்கு வீடு வழங்க வேண்டும் என வலியுறுத்தி பிப்ரவரி 22}ம் தேதி சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளதாக சமூக சமத்துவப் படை நிறுவனத் தலைவர் ப.சிவகாமி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வேலூரில் செய்தியாளர்களிடம் கூறியது:

சாதி, மத பேதமற்று அனைத்துத் தரப்பு மக்களுக்காக கடந்த டிசம்பர் 18}ம் தேதி சமூக சமத்துவப் படை புதியதாக தொடக்கப்பட்டுள்ளது. இக்கட்சி அம்பேத்கரை தத்துவ வழிகாட்டியாகக் கொண்டு செயல்படும்.

அரசின் இலவசத் திட்டங்களால் வறுமையை ஒழிக்க முடியாது. மக்களாகவே முன்னேறும் வகையிலான திட்டங்களால்தான் சமுதாயம் தழைக்கும். விவசாயக் கூலிகளின் வாழ்வாதாரத்துக்காக இலவச நிலம் வழங்க வேண்டும்.

பெண்களுக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். ஒவ்வொரு குடும்பத்திலும் படித்த பெண்களுக்கு அரசு அல்லது தனியார் வேலை என உத்தரவாதம் அளிக்க வேண்டும். அதிலும் நலிந்த சமூகத்தினருக்கு உள் ஒதுக்கீடு வழங்க வேண்டும்.

கலப்புத் திருமணங்களால் சமூக மாற்றம் ஏற்படாது. கிராமங்களுக்கும், தாழ்த்தப்பட்டோர் உள்ள பகுதிக்கும் இடையே உள்ள இடைவெளியை அகற்ற வேண்டும். இப்போதும் பல இடங்களில் தீண்டாமை கொடுமை நடைபெறுகிறது. தாழ்த்தப்பட்டோர் வசிக்கும் பகுதிகளைத் தனிப் பஞ்சாயத்துகளாக அறிவிக்க வேண்டும்.

வரும் 2010}2011 நிதியாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உபநிதியில் இருந்து தனியே நிதி ஒதுக்கி நிலத்தை வாங்கி வழங்கும் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். நடைபாதையில் வசிப்போருக்கு வீடு வழங்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னையில் பிப்ரவரி

22}ம் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. இதற்காக மாவட்டந்தோறும் பிரச்சாரங்கள் செய்து வருகிறோம் என்றார்.

மாவட்டத் தலைவர் மோகன்ராஜ், மாவட்ட துணைத்தலைவர் சாமுவேல் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### 25 ஆயிரம் பேருக்கு வேலை: எஸ்பிஐ திட்டம்

First Published : 13 Feb 2010 12:05:00 AM IST




புது தில்லி, பிப்.12: நாட்டின் மிகப்பெரிய பொதுத்துறை வங்கியான பாரத ஸ்டேட் வங்கி (எஸ்பிஐ) நடப்பு ஆண்டில் 25 ஆயிரம் பேரை புதிதாக வேலைக்குச் சேர்க்கத் திட்டமிட்டுள்ளது. இத்தகவலை வங்கியின் தலைவர் ஓ.பி. பட் தெரிவித்தார்.

இந்தியாவில் மிக அதிக எண்ணிக்கையிலான கிளைகளைக் கொண்டதும் பாரத ஸ்டேட் வங்கிதான். எனவே அதிக அளவில் பணியாளர்கள் உள்ளனர்.

நடப்பு நிதி ஆண்டில் பல்வேறு பணிப் பிரிவுகளில் 25 ஆயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப் பட உள்ளனர் என்று அவர் கூறினார். கிராமப் பகுதிகளில் வங்கியின் செயல்பாட்டை மேலும் அதிகரிக்கும் நோக்கில் 2,000 அதிகாரிகள் கூடுதலாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். ஏற்கெனவே உள்ள 2,500 அதிகாரிகளுடன் இவர்களும் இணைந்து செயலாற்றுவர் என்று அவர் கூறினார்.

வங்கியில் எழுத்தர் மற்றும் வர்த்தகப் பணிகளுக்காக 11 ஆயிரம் பேர் தேர்வு செய்யப்படுவர். கிராமப்புறங்களில் வங்கி வழங்கிய கடன்களை வசூல் செய்யும் பணி மற்றும் விவசாயம் சார்ந்த பணிகளை ஆய்வு செய்ய 481 அதிகாரிகளும் தேர்வு செய்யப்படுவர் என்று அவர் கூறினார். இது தவிர நிர்வாகப் பணிக்காக 500 அதிகாரிகள் நியமிக்கப்பட உள்ளனர்.

டிசம்பர் மாதத்துடன் முடிவடைந்த காலாண்டில் வங்கியின் லாபம் ரூ. 2,479 கோடியாகும். முந்தைய ஆண்டு எட்டிய லாபத்தை தற்போதும் எட்டியுள்ளது.

தற்போது வீட்டுக் கடன் வழங்குவது உள்ளிட்ட பணிகளை வங்கி தீவிரமாக செயல்படுத்தி வருகிறது. சலுகை அடிப்படையில் 8 சதவீத வட்டியில் வீட்டுக் கடன் வழங்கப்படுகிறது. இதுவரை ரூ. 4,930 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

டிசம்பருடன் முடிவடைந்த காலாண்டில் வங்கி ரூ. 6,07,154 கோடி கடன் வழங்கியுள்ளது. முந்தைய ஆண்டு இதேகாலத்தில் வங்கி வழங்கியதைக் காட்டிலும் 19 சதவீதம் கூடுதலாகும்.

இதேபோல வங்கி திரட்டிய சேமிப்பு அளவு ரூ. 7,70,985 கோடி. முந்தைய ஆண்டைக் காட்டிலும் 11 சதவீதம் அதிகம்.

வங்கியின் மொத்த வருமானம் ரூ.21,145 கோடி. நடப்பு நிதி ஆண்டின் 9 மாதங்களில் வங்கியின் ஒட்டுமொத்த லாபம் ரூ. 3,354 கோடி. முந்தைய ஆண்டைக் காட்டிலும் லாபம் 10 சதவீதம் சரிந்துள்ளது.

## விவசாயிகளுக்கு உதவ தேசிய விதை சேமிப்பு மையம்: மத்திய அரசு திட்டம்

First Published : 13 Feb 2010 01:29:40 AM IST

பெங்களூர், பிப்.12: விவசாயிகளுக்கு உதவுவதற்காக தேசிய பயிர் விதை சேமிப்பு மையங்களை அமைக்க அரசு ஆலோசித்து வருவதாக மத்திய வேளாண் துறை செயலாளர் டி. நந்தகுமார் தெரிவித்தார்.

இந்திய தேசிய விதை சங்கம் சார்பில் இந்தியன் சீட் காங்கிரஸ் என்ற 2 நாள் மாநாடு பெங்களூரில் வெள்ளிக்கிழமை துவங்கியது. இந்த விழாவில் கலந்துகொண்ட பிறகு

நிருபர்களுக்கு நந்தகுமார் அளித்த பேட்டி:

இப்போதைக்கு நாட்டில் பயிர் விதைத் தட்டுப்பாடு இல்லை. விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி விதைகள் கிடைக்கின்றன. எதிர்காலத்திற்காகவும் விதைத் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களிலும் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு உதவுவதற்காக தேசிய அளவில் விதை சேமிப்பு மையங்கள் அமைக்கப்படும். விதைத் தட்டுப்பாடு ஏற்படும்

சமயங்களில் இந்த சேமிப்பு மையங்களில் இருந்து விவசாயிகளுக்கு விதைகள் விநியோகிக்கப்படும்.

சேமிப்பு மையங்கள் அமைப்பது தொடர்பாக திட்டம்தீட்டி அரசு ஆலோசித்து வருகிறது. தனியார் துறை, ஏஜென்சிகளுடன் இணைந்து இந்த மையம் அமைக்க ஒரு ஆண்டு ஆகும். விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கவும், உணவுப் பாதுகாப்புக்கும் இந்த மையங்கள் உதவும்.

தற்போது நாட்டில் போதுமான அளவு உணவு தானியங்களில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. எனவே, கவலைப்பட அவசியமில்லை. ரபி பருவ சாகுபடியில் கடந்த ஆண்டின் உற்பத்தி அளவே இந்த ஆண்டும் கிடைத்துள்ளது.

உணவு, தானியப் பற்றாக்குறை குறைந்துள்ளது. வரும் கரீப் பருவத்தில் போதுமான மழையைப் பொருத்து உணவு, தானிய உற்பத்தி அதிகரிக்கும்.

விலைவாசி உயர்வால் நுகர்வோர் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து நந்தகுமார் கூறுகையில், பதுக்கல்காரர்களும் சில்லரை வர்த்தகர்களும் விலைவாசியை அதிகரிக்கின்றனர். இந்தப் பிரச்னையை தீர்க்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இந்த மாநாட்டில் இந்திய தேசிய விதை சங்க தலைவர் உதய்சிங், வேளாண்துறை இணைச் செயலர் அசோக், முதன்மைச் செயலர் முனியப்பா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்திய விதைத் துறையின் தந்தை என்றழைக்கப்படும் மூத்த விஞ்ஞானி பட்வாலே, மற்றும் மன்மோகன் அதாவத் ஆகியோரை பாராட்டி பரிசு வழங்கப்பட்டன.

## சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம்

First Published : 13 Feb 2010 06:38:18 AM IST

குளித்தலை, பிப். 12: கரூர் மாவட்டம், குளித்தலையில் தேசிய சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம், பருவகால நிலை குறித்த விழிப்புணர்வு முகாம் அண்மையில் நடைபெற்றது.

குளித்தலை கிராமியம் தொண்டு நிறுவனம், மத்திய அரசின் தேசிய சுற்றுச்சூழல் அமைச்சகம், திண்டுக்கல் அமைதி அறக்கட்டளை ஆகியன சார்பில் நடைபெற்ற இந்த முகாமுக்கு இயற்கை வேளாண் விஞ்ஞானி கோபாலகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

விழிப்புணர்வு முகாமில் காலநிலை மாற்றம் குறித்து ஓய்வு பெற்ற பேராசிரியர் சுவாமிநாதன் பேசியது:

காலநிலை மாற்றத்தால் சுனாமி, பூகம்பம், கடல் சீற்றம், கடல் உள்வாங்குதல் ஆகிய அழிவுகள் ஏற்படுகின்றன. பொதுமக்கள் தேவையான நேரத்தில் மட்டுமே மின் சாதனங்களை பயன்படுத்த வேண்டும். இந்திய அரசின் ஆற்றல் சிக்கன அமைப்பின் பிஇஇ முத்திரையிடப்பட்ட மின்சாதனப் பொருள்களை வாங்க வேண்டும். பிளாஸ்டிக் பொருள்களை உபயோகிப்பதைத் தவிர்கக வேண்டும்.

இருசக்கர வாகனங்களை முறையாகச் சீரமைக்க வேண்டும். குடிநீர் சிக்கனம் போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டும். புவி வெப்பமடைவதால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்றார் சுவாமிநாதன்.

முன்னதாக பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்ட விழிப்புணர்வுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

முன்னோடி விவசாயி ஏ.வி. கோபாலதேசிகன், தொண்டு நிறுவனப் பயிற்றுநர் எம். கருப்பண்ணன், ஒருங்கிணைப்பாளர்கள் என். தனபால்ராஜா, எம். கோபால், எம். மலையப்பன், கூட்டமைப்பு நிர்வாகி எம். வசந்தா, மகளிர் திட்ட மேலாளர் ஆர். பெரியசாமி மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள், பள்ளி மாணவ-மாணவிகள் பங்கேற்றனர்.

கிராமிய தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த பி. நாராயணன் வரவேற்றார். ஒருங்கிணைப்பாளர் எஸ். சரவணன் நன்றி கூறினார்.

### சேரடி அணை கட்ட பேரவைக் குழுவிடம் எம்.எல்.ஏ. கோரிக்கை

First Published : 13 Feb 2010 01:03:39 AM IST

தம்மம்பட்டி, பிப்.12: சேலம் வந்த சட்டப்பேரவை மனுக்கள் குழுவிடம் தலைவாசல் எம்.எல்.ஏ. சின்னதுரை கோரிக்கை மனு ஒன்றை வெள்ளிக்கிழமை கொடுத்தார்.

அதில் தம்மம்பட்டி அருகே ஜங்கமசமுத்திரம் ஊராட்சியில் சேரடி கிராமத்தில் கொல்லிமலை அடிவாரத்தில் சுவேத நதி துவங்கும் எழுத்துக்கல் என்னுமிடத்தில் பிரமாண்ட அணை கட்ட வேண்டும் என்றும், சென்றமுறை சட்டப்பேரவை மனுக்கள் குழுவிடம் இதே கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால் இதனை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது.

எனவே இத்திட்டத்தை துரிதப்படுத்த வேண்டும் என்றும், இந்த அணை கட்டினால் சேலம், திருச்சி, பெரம்பலூர், கரூர் மாவட்ட விவசாயிகள் பலன் அடைவார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

### மேட்டூர் அணை நீர்மட்டம் 76.28 அடி

First Published : 13 Feb 2010 01:01:58 AM IST

சேலம், பிப். 12: மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 76.28 அடியாக இருந்தது. அணைக்கு, விநாடிக்கு 868 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 1,800 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

அணையின் நீர் இருப்பு 38.35 டி.எம்.சி.

**தஞ்சை மாவட்டத்தில் 1.20 லட்சம் டன் நெல் கொள்முதல்**

First Published : 13 Feb 2010 06:49:26 AM IST
Last Updated : 13 Feb 2010 10:09:57 AM IST

தஞ்சாவூர், பிப். 12: தஞ்சாவூர் மாவட்டத்தில் இதுவரை 350 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் 1.20 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் எம்.எஸ். சண்முகம்.

மாவட்டத்திலுள்ள சில நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை வெள்ளிக்கிழமை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்ட அவர் இதைத் தெரிவித்தார்.

அம்மன்பேட்டை கொள்முதல் நிலையத்தில் மூட்டைக்குக் கூடுதலாக 250 கிராம் அதிகமாக நெல் கொள்முதல் செய்த பணியாளருக்கு அபராதம் விதிக்கவும், கண்டியூர் நிலையத்தில் பழுதடைந்துள்ள நெல் தூற்றும் இயந்திரத்தைச் சரி செய்யவும் நுகர்பொருள் வாணிப கழக அலுவலர்களுக்கு ஆட்சியர் அறிவுறுத்தினார்.

கீழத்திருப்பூந்துருத்தி நெல் கொள்முதல் நிலையத்தில் நெல் மூட்டைகள் தேங்கி இருப்பதைக் கண்ட ஆட்சியர், அவற்றை எடுத்துச் செல்ல உடனடியாக லாரிகளை அனுப்ப உத்தரவிட்டார்.

நடுக்காவேரி நிலையத்தில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லில் அதிகளவில் தூசு கலந்து மாசுபட்டிருந்ததால், அலட்சியமாகப் பணியாற்றிய நெல் கொள்முதல் நிலையப் பணியாளரை மாற்ற உத்தரவிட்டார்.

நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மேலாளர் (தரக் கட்டுப்பாடு) விஜயராகவன், உதவி மேலாளர் மனோகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

**சம்பா தாமதமாகப் பயிரிட்டிருந்தால்...**

First Published : 13 Feb 2010 06:50:05 AM IST

திருக்காட்டுப்பள்ளி, பிப். 12: சம்பா பயிர்களைத் தாமதமாகப் பயிரிட்டிருந்தால் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து பூதலூர் வேளாண்மை உதவி இயக்குநர் கோ. ராமதாஸ் விளக்கமளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பூதலூர் ஒன்றியத்துக்குள்பட்ட சோளகம்பட்டி, பொன்விளைந்தான்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் சம்பா பயிர்கள் தாமதமாக நடவு செய்யப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் பிபிடி ரக நெல்லில் இலைப்புள்ளி, குலைநோய் மற்றும் பாக்டீரியா, இலைக்கருகல் உள்ளிட்ட நோய்கள் காணப்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு ட்ரைசைக்ளோசோல் மருந்து 120 கிராமுடன், கார்பண்டாசிம் 100 கிராம், டெட்ராசைக்ளின் 3 பாக்கெட் (18 கிராம்) ஆகிய மருந்துகளை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

மேலும், வளர்ச்சி சரியாக இல்லாத பயிர்களுக்கு, 2 கிலோ யூரியாவை 1 கிலோ ஜிங் சல்பேட்டுடன் கரைத்து, 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு பூதலூர் வேளாண் துறை அலுவலர்களை அணுகலாம்.

### மண்வள பாதுகாப்புக்கு ரூ.1 கோடி ஒதுக்கீடு

First Published : 13 Feb 2010 12:57:46 AM IST

கூடலூர், பிப். 12 : கூடலூர் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு பணிக்காக ரூ.1 கோடியே 24 லட்சத்திற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக, வேளாண் பொறியியல் துறை அறிவித்துள்ளது.

வேளாண்மை பொறியியல் துறை சார்பில் பண்ணை இயந்திரக் கருவிகளை இயக்குவது மற்றும் பராமரிப்பது குறித்த பயிற்சி முகாம், பெண் விவசாயிகளுக்காக நடத்தப்பட்டது. பயிற்சி நிறைவு நிகழ்ச்சியில் யூகோ வங்கி மேலாளர் ரவீந்திரன், பசுமைக் குடில் அமைத்துச் செய்யும் விவசாயத்திற்கு அரசு மானியம் வழங்குவதாகவும் பெண் விவசாயிகள் இதுபோன்ற அரசு நலத் திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கூறினார். நிகழ்ச்சிக்கு உதவி செயற் பொறியாளர் சண்முகம் தலைமை வகித்தார். இளநிலைப் பொறியாளர்கள் ஜி.என்.சுப்பிரமணியன், பக்ருதீன், செயற் பொறியாளர் ராஜன், மாவட்ட ஊராட்சித் தலைவர் கோமதி சிவானந்தராஜா, ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் ஜெயா, சேரங்கோடு ஊராட்சி துணைத் தலைவர் தங்கவேலு, நீர்ப்பிடிப்பு சங்கத் தலைவர் தமிழழகன், செயலாளர் ஞானசேகர், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்ட சமுதாய ஒருங்கிணைப்பாளர்கள் தேவதாஸ், தன்ராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கடந்த 5 ஆண்டுகளாக சிறப்பாக பயிற்சி நடத்த உதவிய ந.பழனிசாமியை பாராட்டி செயற் பொறியாளர் ராஜன் சான்றிதழ் வழங்கினார்.

உதவி மண்வளப் பாதுகாப்பு அலுவலர் சுந்தரலிங்கம் வரவேற்றார். உதவி செயற் பொறியாளர் சண்முகம் நன்றி கூறினார்.

**19ம் தேதி நீலகிரி விவசாயிகள்  குறைதீர்ப்பு நாள் கூட்டம்**

First Published : 12 Feb 2010 01:02:39 AM IST

உதகை பிப்.11: நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம், உதகையில் வரும் 19-ம்தேதி காலை 11 மணிக்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடத்தப்படுகிறது.

÷நீலகிரி மாவட்ட விவசாயிகள், தங்கள் குறைகளை தோட்டக்கலை இணை இயக்குநர், தபால் பெட்டி எண் 72, உதகை-1 என்ற முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கலாம்.
÷இக்கூட்டத்திற்காக விவசாயிகள் தங்கள் பொதுவான கோரிக்கைகளை தவிர்த்து தங்களது விவசாயம் சம்பந்தப்பட்ட மின்சார இணைப்பு, நீர்ப்பாசனம் மற்றும் இடுபொருட்கள் கோரிக்கைகளை மட்டும் அனுப்பி வைக்க வேண்டும் என மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குநர் சி.இஸ்ரவேல் தெரிவித்துள்ளார்.

**தலையங்கம்: நம் ஆய்வுகளை நாமே செய்வோம்**

First Published : 12 Feb 2010 12:00:00 AM IST
Last Updated : 12 Feb 2010 12:56:51 AM IST

எல்லா மாநிலங்களிலும் பரவலாக எதிர்ப்பு தோன்றியதையடுத்து, குறிப்பாக இந்தியாவின் ஏழு முக்கிய நகரங்களில் நடைபெற்ற கருத்துக்கேட்பு கூட்டங்களில் காணப்பட்ட ஏகோபித்த எதிர்ப்பைக் கண்டு, மரபீனி மாற்றுக் கத்தரிக்காயை அறிமுகம் செய்வதை தாற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது மத்திய அரசு. இத்திட்டத்தைக் கைவிட்டுவிட்டோம் என்ற சொல்லத் துணிவில்லாமல், தாற்காலிகமாக நிறுத்தி வைப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

மக்களுக்கும் வேளாண் தொழில்துறையினருக்கும் ஏற்புடைய வகையில் அறிவியல் உண்மைகள் நிறுவப்படும் வரை, சுற்றுச்சூழலுக்கும் மனித உடலுக்கும் தீமை விளைவிக்காது என்பதை  நீண்டகாலச் சோதனைகள் நடத்தி முடிவுகள் காணப்படும்வரை இந்த பி.டி. கத்தரிக்காயை நிறுத்தி வைப்பதாக மத்திய சுற்றுச்சூழல்துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் அறிவித்துள்ளார்.

இந்தக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டித்தான் இத்தனை நாள்களாக விவசாயிகள் போராடி வந்தனர். ஆனாலும், அதே காரணங்களை அரசே தன் வாயால் சொல்லி, நிறுத்தி வைப்பதுதானே அரசின் வழக்கம். அந்த வழிவழி வந்த நடைமுறை மாறாமல், ஏதோ தாங்களாகவே நிறுத்தி வைப்பதைப்போல பி.டி.கத்தரிக்காயை மூட்டை கட்டி வைக்கத் தீர்மானித்தார்கள். கடைசியாக, இப்போதாகிலும் இத்தகைய நல்ல முடிவு எடுத்தார்களே என்பதற்காக மத்திய அரசைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

பி.டி. கத்தரிக்காய் தடை செய்ததில் வெற்றி அடைந்த களிப்பில் இன்னும் சில கடமைகளை வேளாண் போராளிகள் மறந்துவிடக்கூடாது. இந்தியாவில், கத்தரிக்காய் போன்று 46 வகை உணவுத்

தாவரங்களுக்கு இத்தகைய மரபீனி மாற்று வடிவங்கள் சோதனை அடிப்படையில், வளர்க்கப்பட்டு வருகின்றன. இவையும் மெல்லமெல்ல தலைகாட்டும் என்பதை மறந்துவிடக்கூடாது. இவற்றில் கத்தரிக்காய்போல, அனைவராலும் உண்ணப்படும் முக்கிய பயிரான நெல் ரகமும் இருக்கிறது.

கத்தரிக்காய் மீதான எதிர்ப்புகள் அதிகமாக இருந்ததால், சற்றே கிடப்பில் போடப்பட்ட மரபீனி மாற்று நெல் ரகங்கள் தற்போது வேறு வடிவம் கொள்ளவும், அவற்றை வீரிய ரகங்களாகச் சந்தைக்குள் கொண்டுவரவும் புதியபுதிய உத்திகளைக் கையாளுவார்கள் என்று சொல்லப்படுகிறது. இவை வீரிய ரகங்களாகச் சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டால், அவற்றை பிரித்தறியும் திறன் நம்மில் பலருக்கும் கிடையாது. ஆகவே, வேளாண் போராளிகள் இத்தகைய மரபீனி மாற்று ஆய்வுக்காக களத்தில் சாகுபடி நிலையில் உள்ள அனைத்துப் பயிர்களையும் கண்டறிந்து அத்தகைய சோதனை முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு உள்ளது.

பி.டி. கத்தரிக்காய் எதிர்ப்பு வெற்றியில் முடிந்ததற்கு காரணம், இதை அனைவரும் சாப்பிடுகிறோம் என்பதுடன் இப்பயிர் அனைத்து மாநிலங்களிலும் பரவலாக சாகுபடி செய்யப்படுகிறது என்பதும்தான். கத்தரிக்காய் அல்லாமல், சில மாநிலங்கள் மட்டுமே விளைவிக்கும் சில வகை உணவுப் பயிர்களுக்கு மரபீனி மாற்று அறிமுகம் செய்யப்பட்டிருந்தால் நிச்சயமாக முழுமையான எதிர்ப்புத் தோன்றியிருக்காது. சில மாநிலங்களில் மட்டும் எதிர்ப்பு எழுந்து, பிசுபிசுத்துப் போயிருக்கும்.

இத்தகைய குளறுபடிகள் அனைத்துக்கும் அரசையும் இதற்கான பொறுப்பு வகிக்கும் ஆட்சியாளர்களை மட்டுமே குறை சொல்வதில் அர்த்தம் இல்லை. இந்தக் குளறுபடிக்கு மிகப்பெரும் பொறுப்பேற்க வேண்டியவர்கள் இந்திய வேளாண் ஆராய்ச்சியாளர்களும் என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

பி.டி. கத்தரிக்காய் அறிமுகம், சாகுபடி இவற்றுக்கு மூல ஆதார நிறுவனம் மான்சாண்டோ. இந்நிறுவனத்தின் துணை நிறுவனமான மைக்கோ மூலமாகத்தான் இந்தியாவில் பி.டி, கத்தரிக்காய் எடுத்துக்கொள்ளப்பட்டது. இது எந்த வித ஆபத்தையும் விளைவிக்காது என்று பரிந்துரை செய்த நிறுவனம் இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம்.

இந்திய ஆட்சியாளர்களைவிட, இந்திய ஆராய்ச்சியாளர்களைக் கைக்குள் போட்டுக்கொள்வதில் பன்னாட்டு நிறுவனங்களுக்குக் கிடைக்கும் வெற்றிதான், இத்தகைய தேவையற்ற மரபீனி மாற்று உணவுப் பொருள்கள் இந்தியாவுக்குள் நுழையக் காரணமாக அமைந்துவிடுகின்றன.

இந்தியாவில் உள்ள வேளாண் பல்கலைக்கழகங்கள், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் ஆகியவற்றின் பல ஆராய்ச்சிகளுக்கு நிதிநல்கை பெருந்தகையாளர்களாக மான்சாண்டோ, ஃபோர்டு போன்ற பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்கள் இருக்கின்றன. இந்தியாவில் ஆராய்ச்சி செய்வதோடு, ஆய்வு தொடர்பான பல்வேறு தகவல்களைப் பெறும் களப்பணிக்கு, நம் ஆராய்ச்சியாளர்களை ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளைக்கு நிதிநல்கையுடன் அழைத்துச் செல்லவும் செய்கிறார்கள். இந்த ஆராய்ச்சியாளர்கள்தான் அரசு மற்றும் பல்கலைக்கழகப் பணிகளில் உயர் பதவிக்கு வருபவர்களும்! பழைய நட்பு புதுப்பிக்கப்படுகிறது. அன்பினால் நெருக்கடி தந்து, தங்களுக்குச் சாதகமான மரபீனி மாற்றுப் பயிர்களை இந்தியச் சந்தையில் நுழைக்கும் அனைத்து கருத்துருக்களையும்

தயாரிக்க வைக்கிறார்கள். பிறகுதான் ஆட்சியாளர்களை மயக்கும் வித்தையை இந்த பன்னாட்டு நிறுவனங்கள் கையில் எடுக்கின்றன.

இந்த நிலைமை ஏற்படக் காரணம் இந்திய அரசு, வேளாண் ஆராய்ச்சிகளுக்கு போதிய ஆர்வம் காட்டாமல், போதிய நிதி ஒதுக்காமல், இவ்வாறாக அன்னிய நிதிநல்கைகளைப் பெற்றுக்கொள்வதை அனுமதிப்பதுதான் என்றால் அது மிகையாகாது. இந்திய அரசுப் பணத்தில் இந்திய ஆராய்ச்சியாளர்கள் தங்கள் ஆய்வுகளை நடத்தவும், பன்னாட்டு நிதிநிறுவனம், அல்லது அத்தகைய தொடர்புகள் உள்ள நிறுவனங்களின் நிதிநல்கையைத் தவிர்ப்பதும் இந்திய வேளாண் ஆராய்ச்சியாளர்கள் முழுக்க முழுக்க இந்தியத்தன்மையோடு நிலைத்து நிற்க நிச்சயம் உதவியாக இருக்கும்.

### நல வாரியத்தில் சேர விவசாயத் தொழிலாளர்களுக்கு அழைப்பு

First Published : 13 Feb 2010 06:55:30 AM IST

திருவாரூர், பிப். 12: நல வாரியத்தில் இதுவரை உறுப்பினராகச் சேராத விவசாயத் தொழிலாளர்கள் உடனடியாகச் சேருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆட்சியர் எம். சந்திரசேகரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தில் இதுநாள் வரையில் உறுப்பினர்களாகச் சேராமல் விடுபட்டுள்ள, 18 முதல் 65 வயது வரை உள்ளவர்கள் அந்தந்த கிராம நிர்வாக அலுவலரிடம் சென்று குடும்ப அட்டை விவரத்தைத் தெரிவித்து விண்ணப்பிக்கலாம் என ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### மீனவ மகளிருக்கு அலங்கார மீன்வளப்பு பயிற்சி

First Published : 13 Feb 2010 01:22:27 AM IST

தூத்துக்குடி, பிப். 12: தூத்துக்குடி மீன்வளக் கல்லூரியில் மீனவ மகளிருக்கு அலங்கார மீன்வளர்ப்பு குறித்த 3 நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது.

தூத்துக்குடி மாவட்ட ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் நிதியுதவியுடன், தூத்துக்குடி மீன்வளக் கல்லூரியின் மீன்வள விரிவாக்கத் துறை சார்பில் இந்த பயிற்சி முகாம் புதன்கிழமை தொடங்கி வெள்ளிக்கிழமை நிறைவடைந்தது.

பயிற்சி தொடக்க விழாவுக்கு கல்லூரி முதல்வர் (பொறுப்பு) மு. வெங்கடசாமி தலைமை வகித்தார். தூத்துக்குடி மண்டல கூட்டுறவு இணைப் பதிவாளர் எம். முருகன் பயிற்சியை தொடக்கிவைத்துப் பேசினார்.

தூத்துக்குடி மாவட்ட ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்ட இணைப் பதிவாளர் க. செந்தமிழ்செல்வி, மீன்வளத் துறை உதவி இயக்குநர் ஆண்டனி சேவியர் ஆகியோர் பேசினர்.

பயிற்சிக் கையேட்டை கல்லூரி முதல்வர் வெங்கடசாமி வெளியிட முதல் பிரதியை கூட்டுறவு இணைப் பதிவாளர் எம். முருகன் பெற்றுக் கொண்டார்.

இந்த பயிற்சியில் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த 25 கடலோர மீனவ மகளிர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். பயிற்சியின் முடிவில் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கல்லூரியின் மீன்வள விரிவாக்கத் துறைத் தலைவர் நாகூர்மீரான், இணைப் பேராசிரியர்கள் இரா.சாந்தகுமார்,ந.வ. சுஜாத்குமார், உதவிப் பேராசிரியர் கோ. அருள்ஒளி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**உழவர் சந்தை விவசாயிகளுக்கு சிறு வணிகக் கடன் அளிப்பு**

First Published : 13 Feb 2010 01:25:29 AM IST

நாகர்கோவில், பிப்.12: நாகர்கோவில் வடசேரியிலுள்ள உழவர் சந்தையில் காய்கனி விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு பீப்பிள்ஸ் கூட்டுறவு வங்கி மூலம் ரூ.1 லட்சம் சிறு வணிகக் கடன் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு கன்னியாகுமரி மண்டல கூட்டுறவு இணைப் பதிவாளர் ஆ.க. சிவமலர் தலைமை வகித்து பேசியதாவது:

நாகர்கோவில் பீப்பிள்ஸ் கூட்டுறவு வங்கி மூலம் சிறு வணிகர்களுக்கு ரூ.5ஆயிரம் சிறு வணிகக் கடனாக வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, காய்கனி வியாபாரம், பூ, பழம், ஜவுளி, பிளாஸ்டிக் பொருள்கள் வியாபாரம் செய்வோருக்கும் பெட்டிக் கடைகள் நடத்துவோருக்கும் இக் கடன் வழங்கப்படுகிறது.

தமிழகத்திலேயே முதன்முறையாக உழவர் சந்தையில் வேளாண் விளைப் பொருள்களை விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு சிறு வணிகக் கடன் 21 பேருக்கு தலா ரூ.5 ஆயிரம் வீதம் வழங்கப்படுகிறது என்றார் அவர்.

மாவட்ட வேளாண் விற்பனைக் குழுத் தலைவர் ஜி.எம். ஷா சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

தமிழ்நாடு மீனவர் நலவாரிய துணைத் தலைவர் இரா. பெர்னார்டு, கூட்டுறவு சார்பதிவாளர் ஜெனட்பாய், பீப்பிள்ஸ் கூட்டுறவு வங்கிச் செயலர் பி. சுப்பிரமணிய பிள்ளை, உழவர் சந்தையின் நிர்வாக அலுவலர் ச. அகஸ்திலிங்கம், உதவி வேளாண்மை அலுவலர் எஸ். மெட்டில்டா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பீப்பிள்ஸ் கூட்டுறவு வங்கி தனி அலுவலர் அ. சண்முகம் பிள்ளை நன்றி கூறினார். மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் செ. செல்வின் ஜெயபாலன் தொகுத்து வழங்கினார்.

**வருமுன் காவாதான் வாழ்க்கை...**

என். முருகன்First Published : 12 Feb 2010 12:00:00 AM IST

உணவுப் பொருள்களின் விலையேற்றம் மக்களை வெகுவாகப் பாதித்து, விலைகளைக் கட்டுப்படுத்த முடியாமல் நமது ஆட்சியாளர்கள் கையைப் பிசைந்து கொண்டு நிற்கின்றனர். இப் பிரச்னையின் அடிப்படை, விவசாயம் சார்ந்தது என்பதை உணராமல், பதுக்கல்காரர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் குறைந்த விலையில் உணவுப் பொருள்களை விற்பனை செய்ய அரசின் மான்யம் என்று அவலை நினைத்து உரலை இடிக்கும் கேலிக்கூத்துகள் அரங்கேறி வருகின்றன.

விவசாய வளர்ச்சியை உறுதி செய்யாமல் நாட்டின் உணவு உற்பத்தியில் தன்னிறைவு நிலைமையை ஏற்படுத்த முடியாது என்பதையும் அதன்பின்னரே உணவுப் பொருள்கள் விலை கட்டுக்குள் வரும் என்பதையும் நமது ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.

இன்றைய இந்தியாவின் 65 சதவிகித மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். நமது தேசிய வருமானக் குறியீட்டில் (ஜிடிபி) 27 சதவிகிதம் விவசாய உற்பத்தியினால் கிடைக்கிறது. நமது ஏற்றுமதியில் 21 சதவிகிதம் விவசாயப் பொருள்களே. கரும்பு, பஞ்சு போன்ற தொழிற்சாலைகளுக்கான மூலப்பொருள்கள் விவசாயத்தின் மூலமே கிடைக்கின்றன. இந்த அளவு முக்கியத்துவம் உள்ள நமது விவசாயம் வளர்ந்த விதம் நம்மில் பலருக்குப் புரிவதில்லை.

இந்தியாவின் ""பசுமைப்புரட்சி'' 1970-களில் அன்றைய மத்திய உணவு மற்றும் விவசாய அமைச்சர் சி. சுப்பிரமணியத்தின் சீரிய தலைமையில், எம்.எஸ். சுவாமிநாதனால் நிறைவேற்றப்பட்டது. 1963-ம் ஆண்டு உலகப் புகழ்பெற்ற விவசாய ஆராய்ச்சியாளர் டாக்டர். நார்மன் பார்லாஃக் என்பவரை இந்தியாவுக்கு அழைத்து வந்து நமது நாட்டின் விவசாயத்துறை விஞ்ஞானிகள் பலருடன் கலந்துரையாடச் செய்து, நமது நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள நிலத்தின் தன்மையை விஞ்ஞானப்பூர்வமாக ஆராய்ந்து, மெக்சிகோ நகரில் உருவாக்கப்பட்ட விதைகளை இங்கே கொண்டு வந்து பயிரிடச் செய்து அமோக விளைச்சலை உருவாக்கினார்கள்.

இதன் விளைவாக 1972-ம் ஆண்டு கோதுமையிலும் 1974-ம் ஆண்டு அரிசியிலும் இந்தியா தன்னிறைவு பெற்றது. அதாவது பிற நாடுகளை எதிர்நோக்கி நமது உணவுத் தேவைகளுக்கு நாம் காத்திருக்க வேண்டியதில்லை எனும் நிலைமையை நாம் உருவாக்கியதை உலகின் வளர்ந்துவிட்ட நாடுகள்கூட வெகுவாகப் பாராட்டினார்கள்.

இது மிகவும் கடினமான ஒரு வேலை என்பது கூர்ந்து கவனிக்கப்பட வேண்டும். விவசாயத்துக்கு அடிப்படையான நீராதாரத்தைப் பெருக்குவது முதல் சரியாக உரமிடுதல், பூச்சிக்கொல்லி மருந்தினைச்

சரியான அளவில், சரியான நேரத்தில் பயிர்களிடையே உபயோகித்து அதிக மகசூல் பெறுதல் போன்ற நடவடிக்கைகளை அரசின் விவசாயத்துறை மேற்கொண்டது. ""விரிவாக்கம்" எனும் விஞ்ஞான நடைமுறைகளைப் படிப்பறிவில்லாத நமது விவசாயிகளுக்கு விவசாயத்துறை அளித்தது. இந்த நடைமுறை உலகெங்கும் பாராட்டப்பட்டது.

பசுமைப்புரட்சிக்குப்பின் பல ஆண்டுகள் நாம் கோதுமை, அரிசி ஆகிய இரண்டு உணவுப் பொருள்களிலும் தன்னிறைவு பெற்றது மட்டுமன்றி நமது தேவைக்கு மேலும் உற்பத்தி செய்யும் நிலைமையை அடைந்தோம். வடஇந்தியாவின் சில மாநிலங்கள் உணவு உற்பத்தியில் உச்சகட்டத்தை அடைந்து மற்ற மாநிலங்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் நிலைமை உருவானது. பஞ்சாப், ஹரியாணா மற்றும் மேற்கு உத்தரப் பிரதேசம் ஆகிய பகுதிகளில் அரிசி, கோதுமை உற்பத்தி அதிகமாகி, மத்திய அரசின் உணவு தானிய தொகுப்புக்குத் தேவையான கோதுமையின் அளவில் 98 சதவிகிதமும், அரிசியின் அளவில் 65 சதவிகிதமும் மேலே கூறிய பகுதிகளிலிருந்து கிடைத்தன.

விஞ்ஞான வளர்ச்சியும், அதன் பலனாக விவசாய உற்பத்தி அதிகரிப்பும் நம்நாட்டின் எல்லா மாநிலங்களிலும் நடைமுறைக்கு வந்தால் நமது நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று, உபரியான உணவுப் பொருள்களை ஏற்றுமதிகூட செய்ய முடியும் என்பதற்கு பஞ்சாப் மாநிலம் ஓர் எடுத்துக்காட்டு. இந்தியாவின் நிலப்பரப்பில் 1.5 சதவிகித விவசாய நிலப்பரப்பைக் கொண்ட பஞ்சாப், நம்நாட்டின் 20 சதவிகித கோதுமைத் தேவையையும், 12 சதவிகித அரிசித் தேவையையும் வழங்குகிறது.

ஆனால் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற பின்னர் விவசாயத்தைக் கவனிக்க மத்திய, மாநில அரசுகள் தவறிவிட்டன. பஞ்சாப் மாநிலத்தின் பல பகுதிகளில் தானியங்கள் அறுவடைக்குப் பின்னர் வெட்டவெளியில் அடுக்கி வைக்கப்பட்டன. தானியக்கிடங்குகளில் போதிய இடம் இல்லாததால், இவ்வாறு வெட்டவெளியில் அறுவடைக்குப்பின் உணவு தானியங்கள் தேக்கி வைக்கப்பட்டு அவை மக்கிப்போய் வீணாகின்றன.

உணவுப் பொருள்களின் விலை உயர்வைச் சமாளிக்க தில்லியில் நடந்த முதல்வர்கள் மகாநாட்டில் பேசிய பஞ்சாப் மாநில முதல்வர் பிரகாஷ் சிங் பாதல், அவரது மாநிலத்தில் இன்றைய நிலைமையில் சுமார் 76 லட்சம் டன் கோதுமையும், 45 லட்சம் டன் அரிசியும் திறந்தவெளியில் தேக்கி வைக்கப்பட்டு வீணாகி வருகிறது எனக் கூறி ஆதங்கப்பட்டுள்ளார்.

ஒருபுறம் விலைவாசி உயர்வால் பாதிக்கப்படும் ஏழை, நடுத்தரக் குடும்பங்களும், மறுபுறம் வெட்டவெளியில் வீணாகும் உணவு தானியங்களும் நம்நாட்டின் நிர்வாகம் சரியாக நடைபெறவில்லை என்பதை உணர்த்துகின்றன. உணவு தானியங்களை அதிக அளவில் விளைவிக்கும் பஞ்சாப், ஹரியாணா போன்ற மாநில முதல்வர்கள் மத்திய அரசின் கீழ் இயங்கும் உணவுக் கார்ப்பரேஷன் தங்கள் மாநிலத்தில் உணவுப் பொருள்களை கொள்முதல் செய்து உணவுத் தேவைகள் உள்ள மாநிலங்களுக்கு விநியோகம் செய்யும் இன்றைய நடைமுறையை ரத்து செய்துவிடலாம் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளன. தாங்களே உணவு தானியங்களை விவசாயிகளிடமிருந்து வாங்கி, உணவுப் பற்றாக்குறை மாநிலங்களுக்கு நேரடியாக விற்பனை செய்து கொள்ள முடியும் என்ற ஒரு நடைமுறையை வலியுறுத்தியுள்ளனர்.

ஆக, இன்றைய உணவுப் பொருள்களின் விலை உயர்வும் தட்டுப்பாடும் நமது மத்திய அரசின் நிர்வாகக் குழறுபடி என்பதை சில முதல்வர்கள் தைரியமாக கூறிவிட்டனர். முதல்வர்களின் மாநாட்டில் குஜராத் முதல்வர் நரேந்திர மோடி பெரிய அளவில் தகராறே செய்துள்ளார். பசுமைப் புரட்சி காலத்திற்குப்பின் நமது நாட்டில் விவசாயம் புறக்கணிக்கப்பட்டுள்ளது எனும் வாதத்தை பல மேல்நாட்டு ஆராய்ச்சியாளர்களும் கூறியுள்ளனர்.

உணவுப் பொருள்களின் இன்றைய விலையேற்றத்துக்கு மக்களின் வாங்கும் சக்தி அதிகரிப்பும் ஒரு முக்கியமான காரணம். அதாவது, கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் ஏழை மக்களின் கைகளில் திணித்த பணமும், பொருளாதார வளர்ச்சி ஆறு ஆண்டுகளாக துள்ளல் நடையுடன் முன்னேறி இந்தியாவின் நடுத்தரக் குடும்பங்களின் வசதியைப் பெருக்கியதாலும் அதிக அளவில் உணவுப் பொருள்களை வாங்கி உபயோகிக்கும் மக்கள் அதிகமாகி தேவை அதிகமாகிவிட்டது.

இதை முதல்வர்கள் கூட்டம் முடிந்தபின் நமது விவசாய அமைச்சர் சரத் பவார் ஒத்துக் கொண்டுள்ளதுதான் வேடிக்கை! ஆகவே, அதிகரித்துவரும் தேவையை ஈடுகட்ட உற்பத்தியைப் பெருக்காமல் விலைவாசியை குறைக்க முடியாது என்பதுதான் உண்மை.

1963-ம் ஆண்டு இந்தியாவுக்கு வந்த பார்லாஃக் அன்றைய நிலைமையில் மேலைநாடுகளில் நடந்த விவசாயம் சார்ந்த விஞ்ஞான ஆராய்ச்சிகளின் பலனை இந்தியாவுக்குக் கொண்டு வந்தார். அதை ஒரு முன்னுதாரணமாக எடுத்துக்கொண்டு அன்றைய நிலையில் நமது விவசாயப் பல்கலைக்கழகங்கள் விவசாய ஆராய்ச்சிகளை மேற்கொண்டன. அதில் வெற்றியும் கண்டன.

புதிய கோதுமை மற்றும் நெல் வகைகள் உருவாக்கப்பட்டன. அவற்றைச் சாகுபடி செய்யும் நவீன முறைகளை விவசாயிகளுக்குப் பயிற்றுவித்து மாநில விவசாயத்துறைகள் வெற்றி கண்டன. ஆனால், உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றபின் நமது கவனம் விவசாயத்திலிருந்து அகன்றது. விவசாயம் சார்ந்த ஆராய்ச்சிகள் ஊக்குவிக்கப்படவில்லை. இதுதான் கசப்பான உண்மை.

விவசாயம் நமது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு அடிப்படை எனும் உண்மையை நாம் மறந்துவிட்டோம். திட்டக்கமிஷன் துணைத்தலைவர் மாண்டேக்சிங் அலுவாலியா, 1980-ம் ஆண்டுக்குப் பின் நாம் விவசாயத்துறையில் முதலீடு செய்வதைக் குறைத்துக் கொண்டுள்ளோம் என ஆதங்கப்பட்டுள்ளார்.

ஆராய்ச்சிகளும் வளர்ச்சியும் எனும் தலைப்பின்கீழ் எல்லா நாடுகளிலும் அரசின் பட்ஜெட்டில் ஒதுக்கப்படும் தொகை அந்நாடுகள் புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கின்றன என்பதைக் காட்டும் குறியீடு என அறிஞர்கள் கூறுவார்கள். அதன்படி பார்த்தால், மத்திய அரசு சராசரி இந்தியன் ஒருவருக்கு ரூ. 275 விகிதம் ஆராய்ச்சிகளுக்குச் செலவிடுகிறது. சீனா சராசரி சீனர் ஒருவருக்காக ரூ. 585-ம், அமெரிக்கா ஒரு சராசரி அமெரிக்கருக்காக ரூ. 3,525-ம் செலவிடுகிறது.

விவசாயத்தை முழுமையாக நம்பியுள்ள மூன்று நாடுகளை நாம் பார்த்தோம். இவற்றில் மிகவும் அதிகமாக விவசாய உற்பத்தியை வாழ்வாதாரமாகக் கொண்டது இந்தியாவே. காரணம் நமது மக்கள்தொகைப் பெருக்கம். அதாவது ஆண்டுக்கு ஒரு கோடியே ஐம்பது லட்சம் புதிய இந்தியர்கள்

பிறக்கிறார்கள். அவர்களுக்கும் சேர்த்து நாம் உணவு உற்பத்தியைப் பெருக்கியாக வேண்டும். ஐந்து ஆண்டுகள் நாம் வாளாவிருந்துவிட்டால் உணவுத் தட்டுப்பாடு உருவாகிவிடும் என்பது சராசரி மனிதனுக்குக் கூடப் புரியும்.

நமது அரசியல்வாதிகளும் உயரதிகாரிகளும் உணவுப்பொருள்களின் விலைவாசியினால் பெரிய அளவில் பாதிக்கப்படுவதில்லை. காரணம் அவர்களில் யாரும் கடைக்குச் சென்று உணவுப்பொருள்களை நேரடியாக வாங்குவது இல்லை. எனவே, ஜனவரி மாதம் 15-ம் தேதி ஒரு கிலோ சர்க்கரை 22 ரூபாய்க்கு விற்றதும், அதே அளவு சர்க்கரை பிப்ரவரி 5-ம் தேதி 47 ரூபாய்க்கு விற்பதும் அவர்களுக்குத் தெரியாது!

சமீபத்தில் ஒருநாள் தில்லியிலிருந்து சென்னைக்கு வரும் விமானத்தில் மத்திய அமைச்சர் ஒருவருடன் பயணம் செய்தபோது சர்க்கரை விலை பற்றியும் அதன் கொள்முதல் விநியோக விஷயங்களில் மத்திய அரசின் குளறுபடிகள் பற்றியும் கருத்துப் பரிமாற்றம் நடந்தது. அந்த அமைச்சருக்கு உணவு விடுதிகளும் இனிப்புப் பதார்த்தங்கள், சாக்லேட்கள் தயாரிப்பாளர்களும்தான் இந்தியாவின் சர்க்கரை உற்பத்தியில் 70 சதவிகிதத்தை உபயோகிக்கின்றார்கள் எனும் உண்மை தெரிந்திருக்கவில்லை.

அதுபோலவே, இன்றைய கணக்குப்படி, ரேஷன் கடைகளில் ஒரு ரூபாய்க்கு ஒரு உணவுப்பொருள் வழங்க நான்கு ரூபாய் அரசு செலவு செய்கிறது என்பதும் தெரிந்திருக்கவில்லை.

உணவு விலை உயர்வு நமது ஆட்சியாளர்களையும், அதிகார வர்க்கத்தினரையும் எள்ளளவும் பாதித்திருக்க முடியாது. இந்த அரசியல்வாதிகளும், நிர்வாகத்தை நடத்தும் அதிகாரிகளும் முன்வைக்கும் உணவுத்திட்டங்கள் நம் நாட்டின் உணவுப் பற்றாக்குறைக்குத் தீர்வு காண்பது என்பது பகல்கனவு.

விவசாய வளர்ச்சி, உணவு உற்பத்தி அதிகரிப்பு, மண்வளத்தைப் பாதுகாப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், நீர்ப்பாசன வசதிக்கான திட்டங்கள், விவசாயிகளின் பிரச்னையை முன்னுரிமை கொடுத்து தீர்க்கும் மனப்பக்குவம் இப்படி எல்லாம் சிந்திக்கக்கூடத் திராணியற்ற அரசின் மனப்போக்குதான் இன்றைய உணவுப் பொருள்களின் விலைவாசி உயர்வுக்குக் காரணம்.

தட்டுப்பாடு என்பது தற்செயலாக ஏற்பட்டது அல்ல, திட்டமிட்டுச் செயல்பட நமது ஆட்சியாளர்கள் தவறியதால் ஏற்பட்டதுதான் இந்தத் தட்டுப்பாடும் விலைவாசி உயர்வும். இந்த நிலைமை தொடர்ந்தால் அதன் விளைவு விபரீதமாக இருக்கும் என்பதற்கான எச்சரிக்கை மணிதான் இப்போது எதிர்நோக்கும் விலைவாசி உயர்வு!

## 1300 கால்நடைகளுக்கு சிகிச்சை

First Published : 13 Feb 2010 12:46:41 AM IST

மதுராந்தகம், பிப். 12: செய்யூர் தாலூகா, ஆக்கினாம்பேடு ஊராட்சியில் கால்நடை பாரமரிப்பு துறை சார்பில் கால்நடை பாதுகாப்பு திட்ட இலவச மருத்துவ முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

÷செய்யூர் கால்நடை மருத்துவ நிலைய மருத்துவர் மணிகண்டன் தலைமையிலான குழுவினர் சுமார் 1,300 கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர்.

÷கால்நடைகளுக்கு சப்பைநோய் தடுப்பூசி, குடற்புழு நீக்கம், செயற்கை கருவூட்டல், காளைகளுக்கு ஆண்மை நீக்கம் உள்ளிட்ட சிகிச்சைகள் செய்யப்பட்டன.

÷மதுராந்தகம் கோட்ட கால்நடை பாரமரிப்புத் துறை உதவி இயக்குநர் டாக்டர் அம்பேத்கர், சிறந்த கிடேரி கன்றுகளுக்கு பரிசும், கால்நடைகளுக்கு தீவனப்புல்லும் வழங்கினார். பிறகு பவுஞ்சூர் கால்நடை மருந்தகத்தை ஆய்வு செய்தார்.

÷முகாமுக்கு ஊராட்சித் தலைவர் சாந்தி மோகன் தலைமை தாங்கினார்.

## ரூ.6.92 லட்சத்தில் மானியத்துடன் கூடிய விவசாய இடுபொருட்கள் வழங்கல்

First Published : 13 Feb 2010 02:49:16 AM IST

திருப்பூர், பிப்.12: திருப்பூர் மாவட்டத்தில் விவசாயத்தை மேம்படுத்தும் விதமாக ரூ.6.92 லட்சம் மதிப்பில் மானியத்துடன் கூடிய விவசாய இடுபொருட்கள் 9 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் உள்ள இயந்திரமயமாக்கல் திட்டம் மூலம் திருப்பூர் மாவட்ட விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய பல்வேறு விவசாய இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, 2009-10-ம் ஆண்டில் இதுவரை ரூ.25.28 லட்சம் மதிப்பிலான இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் பல்வேறு விவசாயிக ளுக்கு இடுபொருட்கள் வழங்கப்பட்டன.

தலா ரூ.2.70 லட்சம் மதிப்பில் 4 சக்கரத்துடன் கூடிய களையெடுக்கும் இயந்திரங்கள் (20 குதிரைத்திறன் சக்திக்கு குறைவானது) 5 பேருக்கும், தலா ரூ.24 ஆயிரம் மதிப்பிலான களை அறுப்பான் இயந்திரங்கள்

2 பேருக் கும், ரூ.34 ஆயிரம் மதிப்பிலான தூவான் இயந்திரம் ஒரு விவசாயிக்கும், தலா ரூ.56 ஆயிரம் மதிப்புடைய 2 சக்கர களையெடுப்பான் இயந்திரங்கள் (10 குதிரைத்திற ன் சக்திக்கு குறைவானவை) ஒரு விவசாயிக்கும் வழங்கப்பட்டது.

இந்த இயந்திரங்களை மாவட்ட ஆட்சியர் சி.சமயமூர்த்தி வழங்க சம்பந்தப்பட்ட விவ சாய பயனாளிகள் பெற்றுக்கொண்டனர்.

திருப்பூர் வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் பி.எஸ்.ஜெகநாதன், உதவி செயற்பொறியாளர் துரைராஜ் உள்ளிட் டோர் பங்கேற்றனர்.

**காட்டன் மார்க்கெட்டில் ஆட்சியர் அலுவலகம் கட்ட விவசாயிகள் எதிர்ப்பு**

First Published : 13 Feb 2010 02:48:57 AM IST

திருப்பூர், பிப்.12: திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் (காட்டன் மார்க்கெட்) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு விவசாயிகள் தரப்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, வெள்ளிக்கிழமை நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் பல்வேறு விவசாயிகள் கருத்து தெரிவித்தனர்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய நிóரந்தர கட்டடம் அமைக்க பல்வேறு இடங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், அனைத்து தாலுகா மக்களும் வந்து செல்லவும், மாநகரில் மையத்திலும் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்திலேயே ஆட்சியர் அலுவலகத்துக்கான கட்டடங்கள் கட்ட வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்தும் அதிகாரிகள் பரிசீலனை செய்து வருகின்றனர்.

இந்நிலையில், திருப்பூர் மாவட்ட ஆட்சியர் சி.சமயமூர்த்தி தலைமையில் வெள்ளிக் கிழமை திருப்பூரில் நடந்த மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் ஆட்சியர் அலுவலகத்துக்கு நிரந்தர கட்டடம் அமைக்க திட்டமிட்டு வருவதை விவசாயிகள் வெகுவாக எதிர்த்தனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், 1930-ல் பஞ்சு இருப்பு வைக்கவும், விற்பனை செய்யவும் துவங்கப்பட்ட திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூட்டத்தில் வரையறுக்கப்பட்ட விவசாயப்பொருட்களும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந் நிலையில் பஞ்சு வரத்து குறைந்ததால் பெரும்பாலான கட்டடங்கள் பயனின்றி உள்ளன. இக்கட்டடங்களை உழவர் சந்தைக்கு பயன்படுத்தி விவசாயிகள் நேரடியாக காய் கறிகள் விற்பனை செய்ய அனுமதிக்க வேண்டும். விவசாய பயன்பாட்டுக்காக ஒதுக் கப்பட்ட இந்த வளாகத்தை மீண்டும் விவசாய பயன்பாட்டுக்காகவே ஒதுக்கவும், மாவ ட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கான நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு தகுதிவாய்ந்த வேறு இடத்தை தேர்வு செய்யவும் வேண்டும் என்றனர்.

அவர்கள் மேலும் கூறுகையில், விவசாயிகள் மின்மோட்டார் வாங்க வழங்கப்படும் மானியத்துக்கான விண்ணப்பிக்கும் காலம் பிப்.28-ம் தேதியுடன் முடிவடையும் தருவாயில் தாராபுரம் பொறியியல் கோட்ட பகுதியில் அதற்கான பணிகள் துவங்கப்பட வில்லை. அதை உடனடியாக முறைப்படுத்த வேண்டும்.

பிஏபி ஒற்றைக்கல் கால்வாய் பகுதியில் போர்வெல் போட அனுமதிக்கவேண்டும். தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் உரங்கள் தட்டுப்பாடின்றி கிடைக்கச் செய்யவும், வெளிச்சந்தையில் உரங்கள் அதிக விலைக்கு விற்பனை செய்வதை கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொப்பரை கொள்முதல் மையங்களில் கொப்பரைகள் மட்டுமே வாங்கப்படுவதால் விவசாயிகளுக்கு உரிய பலன் கிடைப்பதில்லை. ஆகவே, கொப்பரைகளாக வாங்குவதற்கு பதிலாக கொப்பரைத் தேங்காயாக வாங்க வேண்டும். மேலும், கொப்பரைகளாக வாங்கும்பட்சத்தில் கழிக்கப்படும் கொப்பரைகளை அங்கேயே ஏலம் விடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கைகள் விடுத்தனர். விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகளை கேட்டறிந்த ஆட்சியர், இக்குறைகளை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மூலம் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

## தொழில்துறை உற்பத்தி 16% உயர்வு

First Published : 13 Feb 2010 12:03:00 AM IST



புது தில்லி, பிப்.12: தொழில்துறை உற்பத்தி டிசம்பர் மாதத்தில் 16.8 சதவீதம் உயர்ந்துள்ளது. இதனால் நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில்துறை உற்பத்தி அதிகரித்துள்ளதால், அரசு அளித்துவரும் வரிச் சலுகைகளைத் திரும்பப் பெறுவதற்கு இதுவே ஏற்ற தருணம் என்று நிதித்துறையைச் சேர்ந்தவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இதை செயல்படுத்தும் விதமாக இம்மாதம் 26-ம் தேதி வெளியாக உள்ள பட்ஜெட்டில் அறிவிப்பு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2008-ம் ஆண்டு டிசம்பரில் தொழில்துறை உற்பத்தி 0.2 சதவீதமாக இருந்தது. சர்வதேச பொருளாதார தேக்க நிலை காரணமாக தொழில்துறை தேக்க நிலையைச் சந்தித்தது. இதையடுத்து அரசு இரண்டு கட்டங்களாக வரிச் சலுகையை அறிவித்தது.

தொழில்துறை உற்பத்தி உயர்வுக்கு முக்கியக் காரணமே ஆலைகளின் உற்பத்தி அதிகரித்ததுதான். இவற்றின் பங்களிப்பு 80 சதவீதமாகும். கடந்த ஆண்டைக் காட்டிலும் இப்பிரிவின் வளர்ச்சி 18.5 சதவீதம் அதிகரித்துள்ளது. முந்தைய ஆண்டு இதன் பங்களிப்பு 0.6 சதவீதமாக இருந்தது.

நுகர்வோர் தயாரிப்புப் பொருள்களான ரெஃப்ரிஜிரேட்டர் உள்ளிட்ட பொருள் உற்பத்தி 46 சதவீதம் அதிகரித்துள்ளது. முந்தைய ஆண்டு இப்பிரிவு 4.2 சதவீத வளர்ச்சியே எட்டியிருந்தது. மூலதன பொருள் உற்பத்தி 38.8 சதவீதம் அதிகரித்துள்ளது.

நடப்புநிதி ஆண்டில் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி 7.2 சதவீதத்தை எட்டும் என அரசு நம்பிக்கை வெளியிட்டுள்ளது. தற்போது தொழில்துறை வளர்ச்சி அதிகரித்துள்ளதால் இது மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம்.

### வரிச் சலுகை தொடர வேண்டும: தொழில்துறையினர்

First Published : 13 Feb 2010 12:02:00 AM IST

புது தில்லி, பிப்.12: தொழில்துறைக்கு அளிக்கப்படும் வரிச் சலுகைகள் தொடர வேண்டும் என்று தொழில்துறையினர் வலியுறுத்தியுள்ளனர்.

2008-ம் ஆண்டின் பிற்பாதியில் ஏற்பட்ட சர்வதேச பொருளாதார சரிவு இந்தியாவிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. தொழில் நிறுவனங்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாயின. இதிலிருந்து தொழில் நிறுவனங்களைக் காப்பதற்காக மத்திய அரசு வரிச் சலுகைகளை இரண்டு கட்டங்களாக அளித்தது. இதனால் அரசுக்கு வரி வருவாய் இழப்பு ரூ. 1.86 லட்சம் கோடியாக உயர்ந்தது. அரசு அளித்த வரிச் சலுகையால் இந்திய நிறுவனங்கள் சரிவிலிருந்து மீண்டன.

இந்நிலையில் தொழில்துறை கடந்த 16 ஆண்டுகளில் எட்டாத அளவுக்கு 16.8 சதவீத வளர்ச்சியை டிசம்பர் மாதத்தில் எட்டியுள்ளது. இதில் குறிப்பாக உற்பத்தித் தொழில்துறை 18.5 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளது.

ஏற்கெனவே தொழில்துறைக்கு அளித்துவரும் சலுகையை படிப்படியாக திரும்பப் பெற வேண்டும் என்று பிரதமரின் பொருளாதார ஆலோசனைக்குழுத் தலைவர் சி. ரங்கராஜன் கூறியுள்ளார். திட்டக் குழு துணைத் தலைவர் மான்டேக் சிங் அலுவாலியாவும் இதே கருத்தைத் தெரிவித்துள்ளார். இருப்பினும் வரிச் சலுகைகள் தொடர வேண்டும் என்று தொழில் துறையினர் வலியுறுத்தி வருகின்றனர். சலுகைகள் தொடருமா அல்லது படிப்படியாகக் குறைக்கப்படுமா என்பது இம்மாதம் 26-ம் தேதி தெரிந்துவிடும்.

உணவு தானிய உற்பத்தி 7.5% சரிவு

First Published : 13 Feb 2010 12:01:00 AM IST



புது தில்லி, பிப்.12: நாட்டின் உணவு தானிய உற்பத்தி 7.5 சதவீதம் சரிந்துள்ளது. 2009-10-ம் ஆண்டில் நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி 21.68 கோடி டன்னாகக் குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 30 ஆண்டுகளில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வறட்சி ஏற்பட்டதால் உற்பத்தி குறைந்ததாக அரசு தெரிவித்துள்ளது. 2008-09-ம் ஆண்டில் இதே காலத்தில் நாட்டின் உணவு தானிய உற்பத்தி 23.44 கோடி டன்னாக இருந்தது.

நடப்பு பருவத்தில் ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான குறுவை சாகுபடி மற்றும் அக்டோபர் முதல் ஜூன் வரையிலான ரபி பருவத்தில் அறுவடை செய்யப்பட்டவையாகும்.

குறுவை பருவத்தில் நெல் சாகுபடி மிகவும் அதிக அளவில் சரிந்துள்ளது. குறுவை பருவ சாகுபடி 8.70 கோடி டன்னாகக் குறைந்துள்ளது. முந்தைய ஆண்டு இதேகாலத்தில் அரிசி உற்பத்தி 9.91 கோடி டன்னாக இருந்தது.

ரபி பருவத்தில் கோதுமை உற்பத்தி 8.2 கோடி டன்னாகும். முந்தைய ஆண்டு இது 8.6 கோடி டன்னாக இருந்தது.

பருப்பு வகைகள் உற்பத்தி 3.4 கோடி டன்னாகக் குறைந்துள்ளது. முந்தைய ஆண்டு இது 4 கோடி டன்னாக இருந்தது.

நடப்பு பருவத்தில் பருப்பு உற்பத்தி சிறிது அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பருப்பு உற்பத்தி 1.47 கோடி டனனாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டு இது 1.45 கோடி டன்னாக இருந்தது.

எண்ணெய் வித்துகள் உற்பத்தி 2.63 கோடி டன்னாக இருக்கும். கடந்த ஆண்டு இது 2.71 கோடி டன்னாக இருந்தது. இதேபோல கரும்பு சாகுபடி 25.12 கோடி டன்னாக இருக்கும் என

மதிப்பிடப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டு இது 28.50 கோடி டன்னாக இருந்தது என்று அரசு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நதி நீரை தேசியமயமாக்க வேண்டும்**

First Published : 13 Feb 2010 01:17:15 AM IST

கோவை, பிப்.12: நதி நீரை தேசியமயமாக்க வேண்டும் என்று தமிழ்நாடு உணவு உரிமை அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இந்த அமைப்பு சார்பில் வேளாண் கொள்கை கலந்தாய்வுக் கூட்டம் கோவையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச்செயலர் செ.நல்லசாமி தலைமை வகித்தார்.

தமிழ்நாடு மாநில விவசாயிகள் சங்கச் செயலர் எம்.ஜெய்லானி, தமிழ்நாடு உணவு உரிமை அமைப்பின் மாநிலச் செயலர் ஜி.ராம்மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சர்வதேச உணவு உரிமை ஆசிய நாடுகளின் பிரதிநிதி ஷபினா பாப்ஸ்ட் சிறப்புவிருந்தினராகப் பங்கேற்றார். இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

தமிழகம் முழுவதும் உள்ள மேய்ச்சல் நிலங்கள், நீர்ப்பிடிப்பு வடிநிலங்கள், பாசனக்

குளங்கள், ஆறுகள், சமுதாயக் காடுகள், காப்புக் காடுகள் ஆகிய உணவு உற்பத்தி சார்ந்த இயற்கை வள ஆதாரங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இவற்றை மீட்க மாநில அரசு தனியாக குழு அமைக்க வேண்டும்.

வேளாண் துறை, பொதுப்பணித்துறையின் நில நிர்வாகப் பிரிவு, பாசன வடிகால் நிர்வாகம், நில வரி விதிப்புத் துறை, நில அளவைத் துறை, தோட்டக்கலைப் பயிர்த் துறை உள்ளிட்ட விவசாயம் சார்ந்த துறைகளை ஒருங்கிணைத்து ஒரே நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரவேண்டும்.

மாநிலங்களுக்கு இடையே நதிநீர்ப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் நதிநீர் பிரச்னை தீர்வுச் சட்டத்தை உடனடியாக இயற்ற வேண்டும். அதேபோல மாநிலங்களுக்கு இடையே பாயும் நதிகள், உப நதிகள் மற்றும் அதன் பாதைகளை தேசியமயமாக்க வேண்டும்.

தமிழகத்தில் இயங்கி வரும் வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் பிற ஆராய்ச்சி நிறுவனங்கள் வெளிநாட்டு நிதி நிறுவனங்களுடன் தன்னிச்சையாக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்வதால் தமிழகத்தின் கலாசாரம், உணவுத் தன்னிறைவு போன்றவற்றுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இதை ஒழுங்குப்படுத்த மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பனை, தென்னை வாரியங்களை ஒரே நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரவும், கள்ளை வெளிநாடுகளில் சந்தைப்படுத்தி விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்புடுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கரும்புக் கழிவுகளில் இருந்து வெளியாகும் மொலாசியசில் இருந்து டாஸ்மாக் மதுபானங்களை தயாரிக்கத் தடை விதிக்க வேண்டும். சிறு தானியங்களில் இருந்து மதுபானங்களை தயாரிக்க அவசரச் சட்டம் இயற்ற வேண்டும்.

தமிழ்நாடு மாநில விவசாயிகள் சங்கச் செயலர் வி.கே.ராமசாமி, தமிழ்நாடு மனித உரிமை பாதுகாப்பு இயக்கத் தலைவர் ஆசிரியர் அய்யாசாமி, வழக்கறிஞர் பி.திருஞானசம்பந்தம் உள்பட பலர் பங்கேற்றனர்.

## மதுரையில் நிரந்தர வர்த்தக மையம் அமைந்தால் ஏற்றுமதி மூலம் தொழில் வளம் பெருகும்: அமைச்சர்

First Published : 13 Feb 2010 04:40:43 AM IST

மதுரை, பிப்.12: மதுரையில் நிரந்தர தொழில் வர்த்தக மையம் அமைந்தால் ஏற்றுமதி மூலம் தொழில் வளம் பெருகும். இதன் மூலம் பொருளாதாரம் வலுப்பெறும் என்றார் மாநில ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் ஆ.தமிழரசி.

மதுரை தமுக்கம் மைதானத்தில் மடீட்சியா சார்பில் 25}வது ஆண்டு அகில இந்திய "ஐடியல் ஹோம்' கண்காட்சியை வெள்ளிக்கிழமை தொடங்கிவைத்து அமைச்சர் பேசியது:

இதுபோன்ற கண்காட்சி மாவட்டத்தின் வளர்ச்சிக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் உதவியாக இருக்கும்.

இங்கு தயாராகும் உற்பத்திப் பொருள்கள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். சீனாவில் தயாரிக்கப்படும் பொம்மை, செல்போன்களுக்கு இருக்கும் மவுசு போன்று, ஏற்றுமதி மூலம் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்பெறச் செய்ய வேண்டும்.

மதுரையைத் தொழில்துறை சார்ந்த மாவட்டமாக மாற்றும் முயற்சியில் மத்திய அமைச்சர் மு.க. அழகிரி ஈடுபட்டுள்ளார். இங்கு நிரந்தர தொழில் வர்த்தக மையம் அமைப்பது தொடர்பாக அவர் உரிய நடவடிக்கை எடுப்பார்.

இக் கண்காட்சியில் பெண்களுக்குத் தேவையான நவீன சமையல் சாதனங்கள் உள்ளன. 300}க்கும் மேற்பட்ட ஸ்டால்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்காண்காட்சி மதுரை மக்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கும் என்றார்.

தமிழ்நாடு சிறு, குறுந்தொழில்கள் சங்கத் (டான்ஸ்டியா) தலைவர் டி.காந்திகுமார் பேசியதாவது:

தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் மதுரை மாவட்டம் அதிக கவனம் செலுத்தி வருகிறது. இங்கு அமைய உள்ள சிப்காட் தொழில்பேட்டையில் 30 சதம் சிறு, நடுத்தர தொழில்களுக்கு ஒதுக்கப்பட உள்ளது.

மானாமதுரையில் இரு பெரிய தொழிற்சாலைகள் வர உள்ளன.

இதன்மூலம் 3 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இதனால், அடுத்த 3 ஆண்டுகளில் மதுரையில் மறுமலர்ச்சி ஏற்படும்.

மதுரையில் தொழில் வளம் தொடர்ந்து பெருகுவதற்கு சென்னை, பெங்களூரூ, கோவை, ஹைதராபாதில் உள்ளது போன்று இங்கும் நிரந்த தொழில் வர்த்தக மையம் அமைக்கப்பட வேண்டும். அதற்கு தமிழக அரசு 25 ஏக்கர் நிலம் அளிக்க முன்வர வேண்டும். அப்போதுதான், சிறுதொழில் நிறுவனத்தினர் தங்களது உற்பத்திகளை தொடர்ந்து காட்சிப்படுத்திட இயலும் என்றார் அவர்.

மடீட்சியா தலைவர் என்.சோமசுந்தரம் வரவேற்றுப் பேசினார். வருவாய்க் கோட்ட அலுவலர் சுகுமார், ஐடியல் ஹோம் கண்காட்சித் தலைவர் எஸ்.அன்புராஜன், துணைத் தலைவர்கள் பி.முருகானந்தம், பி.சுரேந்திரன் உள்பட பலர் பேசினர். கௌரவச் செயலர் வி.எஸ்.மணிமாறன் நன்றி கூறினார்.

**வங்கிக்கடன் ஜப்தி நடவடிக்கை: விவசாயிகள் சங்கம் கண்டனம்**

First Published : 13 Feb 2010 01:00:54 AM IST
Last Updated : 13 Feb 2010 09:47:52 AM IST

ராசிபுரம், பிப்.12: விவசாயக் கடனுக்காக ஜப்தியில் ஈடுபடும் வங்கிகளின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தப்படும் என்று, தமிழக விவசாயிகள் சங்கம் தெரிவித்துள்ளது.÷

÷தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் கே.சுந்தரம் வெளியிட்டுள்ள அறிக்கை:

÷விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதற்காக மத்திய அரசால், விவசாயிகள் டிராக்டர் வாங்க தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் வழங்கப்பட்டு வந்தது. அதன்படி டிராக்டர் வாங்கி விவசாயம் செய்யும் போது, விளைபொருட்களுக்கு கட்டுபடியான விலை இல்லாததால் பெரும் நஷ்டத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

÷இதனால் கடன் கட்ட முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப் பட்டுள்ளனர். எனவே விவசாயிகள் சங்கம் சார்பில் கடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என மத்திய அரசிடம் வலியுறுத்தப்பட்டது.

÷இதன் காரணமாக மத்திய அரசு ரூ.70 ஆயிரம் கோடி கடன் தள்ளுபடி செய்வதாக கடந்த ஆண்டு அறிவித்தது. ஆனால் இதுவரை கடன் தள்ளுபடிச் சலுகை விவசாயிகளை வந்தடையவில்லை.

÷இந்நிலையில் தற்போது வங்கிகள் "கடன் வட்டி, அபராத வட்டியை விவசாயிகள் ஒரு வாரத்திற்குள் செலுத்த வேண்டும், இல்லையென்றால் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படும்' என தற்போது எச்சரித்துள்ளன. இதனால் விவசாயிகள் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகி உள்ளனர்.

÷இந்நிலையில் வங்கி அதிகாரிகள், சில இடங்களில் டிராக்டர்களை ஜப்தி செய்துள்ளனர். இச்செயலை கண்டிக்கிறோம். ஜப்தி செய்த டிராக்டரை நிபந்தனையின்றி சம்பந்தப்பட்ட விவசாயிடம் ஒப்படைக்க வேண்டும். இல்லாவிட்டால் முதற்கட்டமாக வங்கி முன்பு ஆர்ப்பாட்டம் செய்ய உள்ளோம், என தெரிவித்துள்ளார்.

**பண்ணைக் கோழிகளுக்கு ராணிகட் நோய் தாக்குதல்**

First Published : 13 Feb 2010 12:59:19 AM IST

நாமக்கல், பிப். 12: நாமக்கல் மண்டலத்தில் உள்ள பண்ணைகளில் கோழிகளுக்கு "ராணிகட்' தாக்குதல் உள்ளதாக, ஆய்வு மையம்  எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி வானிலை ஆய்வு மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள செய்தி:

பிப். 13, 14, 15, 16 ஆகிய நான்கு நாட்களும் வானம் தெளிவான மேகமூட்டத்துடன் காணப்படும்; நான்கு நாளும் மழையில்லை. காற்றின் வேகம் மணிக்கு 4, 6 கி.மீ. வேகத்தில் தென்கிழக்கு, கிழக்கிலிருந்து வீசும். அதிகபட்ச வெப்பநிலை 91.4 டிகிரி பாரன்ஹீட்டாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 68.0 டிகிரி பாரன்ஹீட்டாகவும் நிலவும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக 73 சதமாகவும், குறைந்தபட்சமாக 37 சதமாகவும் காணப்படும்.

சிறப்பு வானிலை: அடுத்த நான்கு நாட்களுக்கான நாமக்கல் மாவட்ட வானிலையில் வானம் தெளிவாகவும், மழையற்றும் காணப்படும். பகல் வெப்பம் 91.4 டிகிரி பாரன்ஹீட் என உயர்ந்தநிலையில் காணப்படுகிறது. இரவு வெப்பமும் உயர்ந்து குளிர் குறைந்த நிலை உள்ளது. காற்றின் ஈரப்பதம் பெரும்பாலான நேரங்களில் குறைவாகவும், அதன் வேகம் மிதமாகவும் காணப்படும்.

பகல் வெப்பம் உயர்ந்து வருவதால் கோழிகளுக்கான தீவன எடுப்பு குறைந்து இயல்பை ஒட்டிய நிலையில் காணப்படும்.

கோடைவெப்ப முன்னெச்சரிக்கையாக தீவனத்தில் கோலின் குளோரைடு சேர்த்து வர வேண்டும். ஃபாகர்ஸ் குளிர்விப்பு முறை தொடர்பான சாதனங்களை தயாராக வைத்திருக்க வேண்டும்.

கடந்த வாரம் கோழியின ஆய்வகத்தில் இறந்த கோழிகளை பரிசோதனை செய்ததில் பெரும்பாலும் "ராணிகட்' நோய் மற்றும் நாள்பட்ட சுவாசக் கோளாறு காரணமாக உயிரிழந்திருப்பது தெரியவந்துள்ளது. இதைக் கட்டுப்படுத்த உரிய தடுப்பூசி மற்றும் பண்ணைகளில் உயிர்ப் பாதுகாப்பு முறைகளை தீவிரமாக பின்பற்ற வேண்டியது அவசியம்.

தினமலர்

**மரங்களை பாதுகாக்க ஆம்புலன்ஸ்: டில்லி மாநகராட்சி கலக்கல் திட்டம்**

பிப்ரவரி 11,2010,23:58 IST

புதுடில்லி : தலைநகர் டில்லியை பசுமை மயமாக்கும் முயற்சியை மாநகராட்சி நிர்வாகம் தீவிரப்படுத்தியுள்ளது. நகரில் உள்ள மரங்களை பேணி பாதுகாப்பதற்கு வசதியாக ஆம்புலன்ஸ் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.அதிவேகமாக உலகம் வெப்பமயமாகி வருகிறது. இதனால், காலம் தவறி மழை பெய்வது, கடல் நீர் மட்டம் அதிகரிப்பது போன்ற பல்வேறு இயற்கை பிரச்னைகள் உருவாகின்றன. மரங்கள் வெட்டப்படுவது, உலகம் வெப்பமயமாவதற்கு முக்கிய காரணமாக உள்ளது. இதனால், சர்வதேச நாடுகள் அனைத்தும் தங்களால் முடிந்த அளவுக்கு மரங்களை வளர்க்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன. தலைநகர் டில்லி, ஒரு காலத் தில் அடர்ந்து வளர்ந்த மரங்களோடு, பச்சை பசேலென பசுமையாக காட்சி அளித்தது. தற் போது, ஏராளமான மரங்கள் வெட்டப்பட்டு விட்டன. எங்கு பார்த்தாலும் ஒரே கான்கிரீட் மயம் தான். இதனால், ஏற்படும் பிரச்னைகளை நன்கு உணர்ந்துள்ள டில்லி மாநகராட்சி அதிரடியாக களத்தில் இறங்கியுள்ளது. தற்போது இருக்கும் மரங்களையாவது பாதுகாக்க வேண் டும் என்ற ஆதங்கத்துடன், புதிதாக ஆம்புலன்ஸ் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

பச்சை நிறம் கொண்ட ஆம்புலன்ஸ் ஒன்று, டில்லி மாநகராட்சியில் தயார் நிலையில் உள்ளது. இதில், இரண்டு தண்ணீர் டாங்குகள், சோப்பு நுரை, ஸ்பிரேயர் உள்ளிட்டவை உள்ளன. வறட்சியால் மரங்கள் காய்ந்த நிலையில் இருந்தாலோ, இலைகள் உதிர்ந்த நிலையில் இருந்தாலோ, அல்லது சாயும் நிலையில் இருந்தாலோ இதுகுறித்து உடனடியாக, பொதுமக்கள் மாநகராட்சிக்கு தகவல் கொடுக்கலாம். உடனடியாக சம்பவ இடத்துக்கு ஆம்புலன்ஸ் வந்து விடும். அதில் இருக்கும் மாநகராட்சி ஊழியர்கள், மரத்துக்கு என்ன பாதிப்பு உள்ளதோ, அதை சரிசெய்வதற்கான நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுப்பர். சில மரங்கள், மிகவும் அழுக்கடைந்த நிலையில் இருந்தால், சோப்பு நுரை கொண்டு, ஸ்பிரேயர் உதவியுடன் தண்ணீரை பீய்ச்சி அடித்து, அவற்றை கழுவுவர். இதற்காக, 60க்கும் மேற்பட்ட மாநகராட்சி ஊழியர்களுக்கு கைதேர்ந்த நிபுணர்களைக் கொண்டு, தோட்டக் கலை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இன்னும் சில மாதங்களில் ஆம்புலன்ஸ்களின் எண்ணிக் கையை அதிகரிப்பதற்கும், மாநகராட்சி நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. டில்லி மாநகராட்சியின் நிர்வாகத்தின் இந்த நடவடிக்கைகளை சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் பாராட்டியுள்ளனர்.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

குன்னம்: குன்னம் தாலுகா வேப்பூர் வேளாண் துறை அலுவலகத்தில் எண்ணெய்வித்து உற்பத்தி செய்தல் மற்றும் தரமான விதை நேர்த்தி செய்தல் குறித்து விவசாயிகளுக்கான 2 நாள் பயிற்சி முகாம் நடந்தது. முகாமுக்கு பெரம்பலூர் மாவட்ட வேளாண்துணை இயக்குனர் அண்ணாதுரை தலைமை வகித்தார். உதவி இயக்குனர் விஜயகுமார் முன்னிலை வகித்தார். வேளாண்விரிவு அலுவலர்கள் அசோகன், கமாலுதீன், அண்ணாதுரை ஆகியோர் எண்ணெய் வித்துஉற்பத்தி மற்றும் தரமான விதை நேர்த்தி செய்தல் குறித்து விவசாயிகளுக்கு

பயிற்சிஅளித்தனர். இதில் அத்தியூர், ஓலைப்பாடி, எழுமூர், குன்னம் உட்பட சுற்றுப்பகுதிகளை சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### வேளாண் பல்கலை விஞ்ஞானிக்கு தேசிய விருது

கோவை : கோவை வேளாண் பல்கலை விஞ்ஞானிக்கு தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது. கோவை வேளாண் பல்கலை பண்ணை இயந்திரவியல் துறை பேராசிரியர் துரைசாமி. வேளாண் பொறியியலில் சிறப்பாக பணிபுரிந்ததற்காக இவருக்கு 2007-2008ம் ஆண்டுக்கான இந்திய வேளாண் பொறியாளர்கள் சங்கத்தின் விருது வழங்கப்பட்டுள்ளது. டில்லியில் நடைபெற்ற 44வது இந்திய வேளாண் பொறியாளர்கள் சங்க விழாவில் இந்த விருது வழங்கப்பட்டது. மத்திய வேளாண் துறை இணை அமைச்சர் தாமஸ், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக இணை இயக்குனர் பாண்டே ஆகியோர் முன்னிலையில், குஜராத் புதுப்பிக்கக் கூடிய சக்தி ஆராய்ச்சி நிலைய இயக்குனர் பதக் இந்த விருதை வழங்கினார். பேராசிரியர் துரைசாமியின் சாதனைகள் பற்றி கோவை வேளாண் பல்கலை வெளியிட்டுள்ள அறிவிப்பில், "பேராசிரியர் துரைசாமி பயிர் வாரியாக பயன்படுத்தத்தக்க வகையில் பண்ணைக் கருவிகளை அறிமுகப்படுத்துவதில் பெரும் பங்கு வகித்துள்ளார். தமிழகத்தில் நெல் நடவு இயந்திரங்கள் மற்றும் கரும்பு அறுவடை இயந்திரங்களை அறிமுகம் செய்வதில் உறுதுணையாக இருந்துள்ளார்.
பன்னாட்டு மற்றும் உள்நாட்டு பத்திரிகைகளில் இவர் இதுவரை 26 ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டு பாராட்டு பெற்றுள்ளார். 1999ம் ஆண்டு சிறந்த பொறியாளர் முனைவர் ஆராய்ச்சிப் படிப்புக்கான விருதை, அப்போதைய பிரதமர் வாஜ்பாயிடம் பெற்றுள்ளார். தற்போது இவர் வேளாண் பல்கலையில் பண்ணை சக்தி மற்றும் இயந்திரங்கள் தொடர்பான பாடத்தை கற்பிக்கும் பணியிலும், பருத்தி அறுவடைக்கான கருவிகளை உருவாக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளார், என கூறப்பட்டுள்ளது.

### வெண்டைக்காய் அறுவடை தீவிரம்

கோபிசெட்டிபாளையம்: கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் வெண்டைக்காய் அறுவடை சுறுசுறுப்பாக தொடங்கியுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் அதிக விவசாய நிலங்களை கொண்ட கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி மற்றும் கீழ்பவானி பாசன பகுதிகளில் நெல், கரும்பு மற்றும் வாழை போன்ற பயிர்கள்தான் அதிகளவில் பயிரிடப்பட்டு வந்தது. விவசாய கூலி தொழிலாளர் பற்றாக்குறையால், விவசாயிகள் மாற்று பயிர்களை பயிரிட தொடங்கினர். கோபி பகுதிகளில் உள்ள விவசாயிகள் குறைந்த காலத்தில் லாபம் தரக்கூடிய கத்தரிக்காய், தக்காளி, முள்ளங்கி, வெண்டைக்காய் போன்ற பயிர்களை பயிரிட்டு வருகின்றனர். குன்னத்தூர், கள்ளிப்பட்டி, துறையம்பாளையம், அத்தாணி, சிறுவலூர், வாணிப்புத்தூர், டி.என்.பாளையம், கடத்தூர், பாரியூர், நம்பியூர் உள்ளிட்ட பகுதிகளில் வெண்டைக்காய் சாகுபடி நடப்பாண்டு அதிகரித்துள்ளது. அர்க்கா, அனாமிகா, பூசா, வர்சா, உபகார் ஆகிய வெண்டைக்காய் ரகங்கள் பயிரிடப்பட்டு வருகிறது. இத்தகைய ரகங்கள் ஒரு ஹெக்டருக்கு 20 முதல் 25 டன் வரை மகசூலை தரும். ஜூன் முதல் செப்டம்பர் வரையிலும், டிசம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை வெண்டைக்காய் வளர்ச்சி அதிகமாக இருக்கும். மண்ணில் நல்ல வடிகால் வசதி கொண்ட, காரத்தன்மை 6-6.8 இருக்கும் போது வெண்டைக்காய் மகசூல் அதிகளவில் இருக்கும்.
கோபி பகுதியில் வெண்டைக்காய் வரத்து அதிகமாக உள்ளது. கிலோவுக்கு 10 ரூபாய் வரை விற்ற வெண்டைக்காய் தற்போது 12 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கூடுதல் விலை கிடைப்பதால் வெண்டைக்காய் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

### சந்தையில் மாடு விற்பனை அதிகரிப்பு

ஈரோடு: ஈரோடு மாட்டு சந்தைக்கு மாடுகளின் வரத்து அதிகரித்ததால், விற்பனை நன்றாக இருந்ததாக வியாபாரிகள் தெரிவித்தனர். ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தை வாரந்தோறும் வியாழக்கிழமை கூடுகிறது. 1,000க்கும் குறைவான மாடுகளே விற்பனைக்கு வரும். ஈரோடு மற்றும் அதன் சுற்று வட்டாரப்

பகுதியான சிவகிரி, மொடக்குறிச்சி, பொள்ளாச்சி, திருப்பூர், கோவை, பவானி, அந்தியூர், அம்மாபேட்டை, ஜம்பை ஆகிய பகுதிகளில் இருந்து கறவை மற்றும் எருமை மாடுகளை விற்பனைக்காக விவசாயிகளும், வியாபாரிகளும் கொண்டு வருகின்றனர். கன்று ஈன்றக் கூடிய பீர்டு மாடுகள், பில்லா, செவல, கறுப்பு, வெள்ளை மாடுகள் என பல ரகங்கள் உள்ளன. இவற்றை வாங்கிச் செல்ல கேரளா, கர்நாடகா, ஆந்திரா மாநில வியாபாரிகள் ஈரோடுக்கு வருகின்றனர். ஈரோடு மாட்டு சந்தை வியாபாரிகள் றியதாவது: சென்ற வாரத்தை காட்டிலும் ஈரோடு மாட்டு சந்தைக்கு மாடுகளின் வரத்து ஓரளவுக்கு அதிகமாகவே இருந்தது. அதே போல் வியாபாரமும் நன்றாக இருந்தது. 400 சிந்து மாடு, 350 எருமை மாடுகளை விற்பனைக்காக வியாபாரிகள் ஈரோடு மார்க்கெட்டுக்கு கொண்டு வந்தனர். சிந்து இன மாடுகள் 14 ஆயிரத்திலிருந்து 27 ஆயிரம் ரூபாய் வரையிலும், எருமை மாடுகள் 12 ஆயிரத்தில் இருந்து 26 ஆயிரம் ரூபாய் வரையிலும் விலைபோனது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**ஈரோடு அரிசி மார்க்கெட்டுக்கு புதிய ரக அரிசி வரத்து**

ஈரோடு: ஈரோடு அரிசி மார்க்கெட்டுக்கு புதியரக அரிசி வரத்தாகி கொண்டிருப்பதால், அதன் விலை மூட்டைக்கு 50 ரூபாய் வரை விலை குறைந்துள்ளதாக ஈரோடு அரிசி வியாபாரிகள் தெரிவித்தனர். ஈரோடு மாவட்டத்தில் கீழ்பவானி பாசன வாய்க்கால், காலிங்கராயன் வாய்க்கால், தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசனம், மேட்டூர் வலதுகரை பாசனம் ஆகியவற்றன் மூலம் ஆண்டுக்கு ஒரு லட்சம் ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. ஏ.டீ.டி-43, ஏ.டீ.டி-36, ஏ.எஸ்.டி.16 (இட்லி அரிசி) ரகங்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. நெல்லை அரிசியாக மாற்றி ஈரோடு மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள சந்தைகளுக்கும், ஆலைகளுக்கும் விற்பனைக்காக விவசாயிகள் கொடுக்கின்றனர். அவற்றில் ஈரோடு வீரப்பன் சத்திரம் பகுதியில் வாரந்தோறும் அரிசி சந்தை கூடுகிறது.
ஈரோடு அரிசி வியாபாரிகள் கூறியதாவது: ஆண்டுதோறும் ஜனவரி மாதம் கடைசியில் மார்க்கெட்டுக்கு புதியரக அரிசிகள் வரத்துவங்கும். அதன்படி சில வாரமாக புதியரக அரிசி வருகிறது. ஈரோடு மார்க்கெட்டுக்கு நேற்று முன்தினம் 5,000 மூட்டை வரத்தானதில், பெரும்பாலான மூட்டைகள் விற்றுத்தீர்ந்தன. அரிசி விலை நிலவரம் (75 கிலோவில்) வருமாறு: கர்நாடகா டீலக்ஸ் (பொன்னி பழையது) 2, 600 முதல் 2,700 ரூபாய், கர்நாடகா டீலக்ஸ் (புதிது)1,500 முதல் 1,600 ரூபாய், தமிழ்நாடு பி.பி.டி., பொன்னி (பழையது) 2,300 முதல் 2,400 ரூபாய், தமிழ்நாடு பி.பி.டி., பொன்னி (புதிது) 1,850 முதல் 1,950 ரூபாய், அதிசயப்பொன்னி (புதியரகம்) 1,500 முதல் 1,600 ரூபாய், அதிசயப்பொன்னி (பழையது) 1,800 முதல் 1,850 ரூபாய், கோ-43., ரகம் (புதிது) 1,250 முதல் 1,350 ரூபாய், இட்லி அரிசி (புதிது)1,500 முதல் 1,600 ரூபாய், ஐ.ஆர்.,20 ரகம் (புதிது)1,300 முதல் 1,400 ரூபாய், ஏ.டி.டீ.,36, (பழையது) 1,600 முதல் 1,700 ரூபாய், ஏ.டி.டீ., 36, (புதிது)1,400 முதல் 1,500 ரூபாய் வரை விற்றது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**தொடர்ந்து குளிர் தாக்குதல் தேங்காய் உற்பத்தி குறைவு**

கோபிசெட்டிபாளையம்: கோபி பகுதியில் தொடர்ந்து நிலவி வரும் குளிர்ந்த சீதோஷ்ண நிலையால் தேங்காய் பருப்பு உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது. கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் இரண்டு வாரமாக தேங்காய் பருப்புக்கு ஒரே விலை நீடிக்கிறது. தேங்காய் பருப்புக்கு கிலோவுக்கு 33 ரூபாய் வரை கிடைப்பதாலும், கோடைக்காலம் தொடங்கி விட்டதால் கோபி பகுதியை சேர்ந்த விவசாயிகள் தேங்காய் பருப்பை அதிகளவில் உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், கோபி பகுதியில் தொடர்ந்து குளிர்ந்த சீதோஷ்ண நிலை நீடித்து வருகிறது. இதனால் தேங்காய் பருப்பை முழுமையாக காய வைக்க முடியாமல் விவசாயிகள் அவதிப்படுகின்றனர். உற்பத்தி குறைவால் கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு நடப்பு வாரம் 163 மூட்டைகளே ஏலத்துக்கு வந்தது. கடந்த வாரத்தை விட 11 மூட்டை குறைவு. ஆயில் மார்க்கெட்டில் தேங்காய் எண்ணெய்க்கு அதிக கிராக்கி இல்லாததால், எண்ணெய் விலையிலும் பெரிய மாற்றம் இல்லை. இதனால் தேங்காய் பருப்புக்கும் விலை உயரவில்லை. நடப்பு வாரம் தேங்காய் பருப்புக்கு கிலோ ஒன்றுக்கு அதிகபட்சமாக 33 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக 32 ரூபாய்க்கும் ஏலம் போனது. கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்த

வாரமும் தேங்காய் பருப்புக்கு இதே விலை கிடைத்தது குறிப்பிடத்தக்கது. வரத்து குறைவால் இரண்டு லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பில் தேங்காய் பருப்பு வர்த்தகம் நடந்தது.

### குளித்தலையில் வாழைத்தார் ஏல விற்பனை மையம் துவக்க விழா

குளித்தலை: குளித்தலையில் வாழைத்தார் ஏல விற்பனை மையம் துவக்க விழா நடந்தது. குளித்தலை வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம் வாழைத்தார் ஏல விற்பனை மையத்தை மாவட்ட கூட்டுறவு துறை இணைப்பதிவாளர் உமாமகேஸ்வரி குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். துணைப்பதிவாளர் சிவசாமி, நகர வங்கி தனி அலுவலர் குணசேகரன், பொது வினியோகத் திட்ட பதிவாளர் பாலச்சந்திரன் முன்னிலை வகித்தனர், தனி அலுவலர் பெரியகருப்பன் வரவேற்றார். கூட்டுறவு துறை இணைப்பதிவாளர் உமாமகேஸ்வரி பேசுகையில்,""விவசாயிகள் தாங்கள் கொண்டு வரும் வாழைத்தார் கொள்முதல் விலை, விவசாயி நஷ்டம் அடையாமல் வியாபாரிகள் நியாயமான விலைக்கு வாங்கி பயன்பெற வேண்டும். மேலும், விவசாயி மனம் நோகாமல் வியாபாரிகள் நடந்து கொள்ள வேண்டும். இதற்கான ஏற்பாடுகளை துறை அலுவலர் கண்காணிக்க வேண்டும்,'' என்றார். மகளிர், ஆடவர் குழு விவசாயிகள், கூட்டு பொறு ப்பு குழுவினர், தோகமலை, குளித்தலை, கிருஷ்ணராயபுரம் பகுதி கூட்டுறவு வங்கி செயலாளர்கள் பங்கேற்றனர். வங்கி செயலளர் சம்பத் நன்றி கூறினார்.

### உளுந்து பயிர் மகசூலை அதிகரிக்க 50 சதவீத மானியத்தில் இடுபொருட்கள்: கலெக்டர் தகவல்

நாகை: நாகை மாவட்டத்தில் உளுந்து பயிரில் மகசூலை அதிகரிக்க தேசிய உணவு பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 2.25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 50 சதவீத மானியத்தில் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது. இதுகுறித்து கலெக்டர் முனியநாதன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:உளுந்து பயிரில் மகசூலை அதிகரிக்க தேசிய உணவு பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் நாகை மாவட்டத்திற்கு 2.25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 50 சதவீத மானியத்தில் இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக சான்று பெற்ற உளுந்து பயறு விதைகளுக்கு கிலோவிற்கு 20 ரூபாய் மானியம், நெல் தரிசில் மகசூலை அதிகரிக்கவும் நுண்ணூட்ட பற்றாக்குறையை போக்கவும் 50 சதவீத மானியத்தில் நுண்ணூட்ட உரம் வழங்கப்படுகிறது. ஜிப்சம் ஒரு எக்டேருக்கு 750 ரூபாய் வீதம் மானியத்தில் வழங்கப்படுகிறது. நெல் தரிசில் உளுந்து பயறு மகசூலை அதிகரிக்க 20 முதல் 25ம் நாள் மற்றும் 30 முதல் 35ம் நாள் பூக்கும் தருணத்தில் 2 தடவை இரண்டு சதவீதம் டி.ஏ.பி., கரைசலை இலைவழி உரமாக தெளிக்கவேண்டும். தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 30 ஆயிரம் ஏக்கரில் டி.ஏ.பி. கரைசலை தெளிக்க 2.5 ஏக்கருக்கு 200 ரூபாய் வீதம் விவசாயிகளுக்கு மானியம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.நாகை மாவட்டத்தில் நெல் தரிசில் பயிரிடப்பட்டுள்ள உளுந்து,பயறு பயிர்கள் தற்போது 15 முதல் 20 நாட்கள் பயிராக உள்ளது. சாறு உறிஞ்சும் பூச்சிகள் மற்றும் இலையை சேதப்படுத்தும் பூச்சிகள் தாக்க வாய்ப்புகள் உள்ளன. இவற்றை கட்டுப்படுத்த ரசாயன பூச்சிக்கொல்லிகளை தவிர்க்கவும், பூச்சிகள் தாக்குதல் பொருளாதார சேதநிலைக்கு அதிகமாக இருந்தால் தாவர பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தி பூச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். அல்லது ஒரு எக்டேருக்கு என்.பி. வைரஸ் கரைசல் 250 புழுக்களுக்கு சமமான 250 மில்லி. என்.பி. வைரஸ் கரைசலை 500 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கவேண்டும். என்.பி. வைரஸ் கரைசல் தெளிப்பதால் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் வளர்ச்சி தடைபடுவதால் மறு உற்பத்தி கட்டுப்படுத்தப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட வேளாண் உதவி இயக்குனர்கள், வேளாண் அலுவலர்கள், துணை வேளாண் அலுவலர்களை அணுகலாம்.

### விவசாயிகளுக்கு மானியம்

மானாமதுரை : மானாமதுரை பகுதியில் துல்லிய பண்ணையம் அமைத்த விவசாயிகளுக்கு, உரம் இலவசமாக வழங்கப்பட்டது. பண்ணையம் அமைத்த 40 விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க, 40 ஆயிரம்

மானியமாக வழங்கப்பட்டது. விவசாய உதவி இயக்குனர் பரமேஸ்வரன் கூறுகையில்,""ஆயில் இன்ஜின், மின் மோட்டார் வாங்க மானியம், "பவர் ஸ்பிரேயர்', மண்புழு உரம் மானியத்தில்  வழங்கப்படும். விபரங்கள் அறிய, "98651 53344' என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்," என்றார்.

### நெல் கொள்முதலில் முறைகேடு செய்வோர் மீது நடவடிக்கை நுகர்பொருள் வாணிபக்கழக தலைவர் எச்சரிக்கை

தஞ்சாவூர் : நெல் கொள்முதல் மையத்தில் முறைகேடு செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் வீரசண்முகமணி எச்சரித்துள்ளார்.காவிரி டெல்டா மாவட்டங்களில் நடந்து வரும் நெல் கொள்முதல் குறித்து தஞ்சையில் ஆய்வுக்கூட்டம் நடந்தது. இதையடுத்து நுகர்பொருள் வாணிபக்கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் வீரசண்முகமணி அளித்த பேட்டி:டெல்டா மாவட்டங்களில் தற்போது நெல் கொள்முதல் பணி முழு வீச்சில் நடந்து வருகிறது. ஆயிரத்து 124 நேரடி நெல் கொள்முதல் மையங்களில் இதுவரை 3 லட்சத்து 62 ஆயிரத்து 417 மெ. டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நெல் கொள்முதல் மையங்களில் விவசாயிகளுக்கு டோக்கன் வழங்கி அதே வரிசையில் கொள்முதல் செய்யப்படும். இந்த நெல்லுக்கு உடனடியாக ரொக்கத்தொகை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதை மேற்பார்வை செய்வதற்கு கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். டெல்டா மாவட்டங்களில் கொள்முதல் நிலையங்களை நிர்வகிப்பதற்கு 159 கொள்முதல் அலுவலர்களும், 17 உதவி மேலாளர்களும் செயல்பட்டு வருகின்றனர். கொள்முதலின் போது முறைகேடு செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.விவசாயிகளிடம் இருந்து பெறப்படும் கோரிக்கைகள் மற்றும் புகார்கள் குறித்து உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள கட்டுப்பாட்டு அறை செயல்பட்டு வருகிறது. தஞ்சை மாவட்டத்துக்கு 94451 90660 என்ற எண்ணிலும், திருவாரூர் மாவட்டத்துக்கு 94451 90661 என்ற எண்ணிலும், நாகை மாவட்டத்துக்கு 94451 90662 என்ற எண்ணிலும் கோரிக்கை மற்றும் புகார்களை தெரிவிக்கலாம். இந்த ஆண்டு 16 லட்சம் மெ.டன் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அனைத்து கொள்முதல் நிலையங்களிலும் உச்சவரம்பின்றி பணம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு வீரசண்முகமணி கூறினார். பேட்டியின்போது தஞ்சை கலெக்டர் சண்முகம் உடனிருந்தார்."சிறப்பு கொள்முதல் திட்டம்'நெல் 300 மூட்டைகளுக்கு மேல் இருப்பு வைத்துள்ள விவசாயிகள் இதுபற்றி தகவல் கொடுத்தால் அவர்களின் களம் அல்லது இருப்பிடத்துக்கே லாரி, தராசு போன்றவற்றை கொண்டு சென்று நெல் கொள்முதல் செய்து அதற்கான தொகையையும் வழங்கும் "சிறப்பு நெல் கொள்முதல் திட்டம்' செயல்படுத்தப்படுகிறது என்று வீரசண்முகமணி கூறினார்.

### விதை கிராம திட்டப்பயிற்சி

திருக்காட்டுப்பள்ளி: பூதலூர் வேளாண் கோட்டத்திற்கு உட்பட்ட கோவிலடியில் விதை கிராமத்திட்டத்தின் கீழ் பயறு வகை பயிற்சி வழங்கப்பட்டது.ஊராட்சித் தலைவர் ராணி தொடங்கி வைத்தார். துணை வேளாண் இயக்குனர் ரகுநாதன் பயறு வகை பற்றிய கருத்துக்கள் கூறினார். பயறு வகைகளை எப்படி பக்குவப்படுத்தி விதைக்கு எடுக்க வேண்டும். விதைச் சட்டத்தின் நடவடிக்கைகுறித்து வேளாண் உதவி இயக்குனர் ராமதாஸ் கூறினார். வேளாண் அலுவலர் முருகவேல், துணை வேளாண் அலுவலர் காமராஜ் ஆகியோர் விதை நேர்த்தி பற்றி விளக்கினர். ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் சந்திரசேகரன், பழனி, வசந்த், உமாபிரியா ஆகியோர் செய்திருந்தனர்.

### நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நடக்கும் குறை தீர்க்கூட்டம்

தஞ்சாவூர் :நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நடக்கும் குறைகளை கீழ்கண்ட செல் எண்களில் தெரிவிக்கலாம் என்று கலெக்டர் சண்முகம் தெரிவித்துள்ளார்.தஞ்சை மாவட்டத்தில் செயல்படும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் இருந்து காலதாமதம் இன்றி நெல் கொள்முதல் செய்யப்படுகிறதா? கொள்முதல்

செய்யப்பட்ட நெல்லுக்கான தொகை உடனடியாக எவ்வித பிடித்தம் இன்றி வழங்கப்படுகிறதா? ஈரப்பதம் அரசு நிர்ணயித்த அளவில் கொள்முதல் செய்யப்படுகிறதா? மின்னணு தராசு பயன்பாட்டில் உள்ளதா? கொள்முதல் செய்யப்பட்ட நெல் உடனுக்குடன் சேமிப்பு கிடங்கிற்கு நகர்வு செய்யப்படுகிறதா? என நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை ஆய்வு செய்து கண்காணிக்க தாலுகாவிற்கு ஒரு மண்டல அலுவலர்கள், தாசில்தார்கள் அடங்கிய குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது.நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் குறைகள் நடப்பது தெரியவந்தால் கீழ்கண்ட செல் எண்களில் தொடர்பு கொண்டு மண்டல அலுவலர்களிடம் தெரிவிக்கலாம். தஞ்சை, திருவையாறு பகுதிக்கு 9445000465, ஒரத்தநாடு- 9488626109, கும்பகோணம்- 9445000466, பாபநாசம்-9443103268, திருவிடைமருதூர்-9445000286, பட்டுக்கோட்டை- 9445000467, பேராவூரணி- 9443103268. இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

### பெரியகுளம் பகுதியில் மாம்பழம் விளைச்சல் பாதிப்பு : பருவமழை குறைந்ததால் விவசாயிகள் கவலை

தேனி : பருவமழை குறைந்ததால், பெரியகுளம் பகுதியில் மாம்பழம் விளைச் சல் கடுமையாக பாதிக்கப்பட் டுள்ளது. இது விவசாயிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.தமிழகத்தில் சேலம், தர்மபுரி பகுதிகளுக்கு அடுத்தபடியாக, அதிக அளவில் மா விவசாயம் நடக்கிறது. காசா லட்டு, கல்லாமை, சவுந்தரம், மகரவல்லி, சேலம் குண்டு, காளைப்பாடி, செந்தூரம், காதரு, மல்கோவா, கிரேப் மற்றும் பல்வேறு நாட்டு மாம்பழங்களும் விளைச்சலாகிறது. நூறாண்டுகளுக்கு மேலாக கொடைக்கானல் மலையடிவாரத்தில், முருகமலை வாலாட்டியிலிருந்து கோயில்காடு வரையிலான 20 கி.மீ.,க்கு 5 கி.மீ., சுற்றளவில் மாந்தோப்புகள் இருக்கின்றன. ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் மாம்பழம் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வியாபாரிகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பயனடைந்து வருகின்றனர்.கடந்த சில ஆண்டுகளாக நல்ல விளைச்சல் கண்டு வந்த இப்பகுதியில், நடப்பு ஆண்டில் வறண்ட நிலை காணப்படுகிறது. வழக்கமாக செப்., முதல் டிச., வரையிலான பருவமழை ஜன.,ல் பூப்பூத்து, நடப்பு மாதத்தில் "கடி' பிஞ்சு நிலையில் காய்கள் இருந்திருக்க வேண்டும். மழை குறைந்ததால், தோப்பு பகுதிகள் வறண்டு பூச்சி தாக்குதலில் சிக்கியுள்ளன. பழனி, நத்தம் பகுதிகளில் மரங்களில் "பிஞ்சு'கள் வந்துள்ள நிலையில், இப்பகுதியிலுள்ள மரங்களில் அங்கொன்றும், இங்கொன்றுமாக பூக்கள் தெரிய ஆரம்பித்திருக்கின்றன.பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த விவசாயிகள் மருந்து தெளித்து வருகின்றனர். இனிமேல் பிஞ்சு விட்டு, மாம்பழம் உற்பத்திக்கு மூன்று மாதங்களுக்கு மேலாகும். அத்துடன், பெரும்பாலான மரங்கள் காய்ப்பு திறன் குறைந்து காணப்படுவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.பாதிக்கப்பட்ட விவசாயிகளில் சிலரது கருத்துக்கள் வருமாறு:உசேன்கான்(கீழவடகரை விவசாயி): மழை குறைந்ததால், கடந்த ஆண்டை விட எனது தோப்பில் 25 சதவீதம் காய்ப்பு இருக்கிறது. கடந்த ஆண்டு, பிப்.,ல் "கடி பிஞ்சு' நிலையில் காய்கள் கொத்துக்கொத்தாக தொங்கின. மார்ச் முதல் அறுவடை துவங்கினோம். ஒரு ஏக்கருக்கு 10 டன்கள் வரை மாம்பழம் விளைச்சல் இருந்தது. நல்ல விலையும் கிடைத்தது. இந்த ஆண்டு, பெரும்பாலான மரங்கள் இன்னும் பூக்கவில்லை. பூத்துள்ள ஒன்றிரண்டு மரங்களை காக்க, ஏக்கருக்கு பூச்சி மருந்து, மராமத்து பணிகளுக்கு ரூ.10 ஆயிரம் வரை செலவு செய்துள்ளோம். அனைத்து தோப்புகளிலும் இதே நிலை தான். விளைச்சலும் 4ல் ஒரு பங்கு தான் கிடைக்க வாய்ப்புள்ளது. செலவு தொகையாவது கிடைப்பது சந்தேகம். குரங்கு தொல்லை அதிகரிக்க வாய்ப்புள்ளது. நல்ல விளைச்சல் இருந்தால், காவலுக்கு ஆட்கள் இருப்பர். குரங்குகளை விரட்டியடித்து விடலாம். விளைச்சல் குறைவதால், குரங்குகளாலும் அதிக பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.பெருமாள்(வடகரை விவசாயி): கடந்த ஆண்டுகளை விட, தற்போது தோப்புகளில் சேதத்தை ஏற்படுத்தி வந்த "ஈ' பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதேசமயம் எட்டுகால் பூச்சி, கத்தாழை பூச்சி போன்ற சில பூச்சி தாக்குதல் இருக்கிறது. இதை கட்டுப்படுத்த மருந்து தெளித்து வருகிறோம். பெரும்பாலான மரங்கள் இன்னும் பூக்கவில்லை. ஆண்டுதோறும் 2 லட்சம் டன்கள் வரை மாம்பழம் விளைச்சல் ஆகிய இப்பகுதியில், இந்த ஆண்டு 10ல் ஒரு பங்கு விளைச்சலாகும் நிலை இருக்கிறது. இத்தோப்புகளை நம்பி வாழும் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட விவசாய குடும்பத்தினருக்கும், நேரடியாகவும், மறைமுகமாகவும் பயன்பெறக்கூடிய வியாபாரிகள் முதல் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர் குடும்பத்தினருக்கும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.தோட்டக்கலைத்துறையினர் கவனத்திற்கு: இத்துறை ஆராய்ச்சிக் கல்லூரி அமைந்துள்ள

இப்பகுதியில் மா விளைச்சல் பாதிப்பு குறித்து கண்டுகொள்ளாமல் இருப்பது, விவசாயிகள் மத்தியில் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. நிபுணர்கள் குழுவினர் உடனடியாக தோப்புகளுக்கு சென்று, மா விளைச்சல் பாதிப்பை தடுக்க, நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### மயிலாடும்பாறையில் அணை : விவசாயிகள் வலியுறுத்தல்

ஆண்டிபட்டி : மூல வைகை ஆற்றில் இருந்து மயிலாடும்பாறைக்கு அருகில் அணை கட்டி, பாலூத்து வழியாக தெப்பம்பட்டி கண் மாய்க்கு நீர் கொண்டு வர வேண்டும் என ஆண்டிபட்டி விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர். தமிழ்நாடு நீர் வள, நில வள திட்டத்தில் விவசாயிகளுக்கான பல்துறை ஒருங்கிணைப்பு கூட்டம் கோத்தலூத்தில் நடந்தது. தோட்டக்கலை கல்லூரி பேராசிரியர் ரத்தினசாமி தலைமை வகித்தார். உதவி பேராசிரியை நாகேஸ்வரி வரவேற்றார். கோத்தலூத்து பகுதி நீர் நிலை ஆதாரங்களின் முந்தைய நிலை, தற்போதைய நிலை, எதிர்கால தேவைகள் குறித்து விவசாயிகள் கருத்துக்களை தெரிவித்தனர்.
மூல வைகை ஆற்றில் இருந்து கொண்டு வரப்படும் நீரால் ஆண்டிபட்டி பகுதியில் 16 கண்மாய்களுக்கு நீர் வரத்து இருப்பதுடன், ஆங்காங்கே தடுப்பணைகள் கட்டுவதால் நிலத்தடி நீர் வளம் பெருகும். விவசாயம் செழித்து, விளைச்சல் அதிகரிக்கும் என விவசாயிகள் தெரிவித் தனர். அதிகாரி கண்மாய் ஆட்சி மண்டல குழு உறுப்பினர் காளிவேல் நன்றி கூறினார்.

### பருத்தி சாகுபடி விவசாயிகள் கவனத்திற்கு

தேனி : குளிர் கால பருத்தி சாகுபடியில் வாடல் நோயை மருந்து தெளித்து கட்டுப்படுத்தலாம் என விவசாயத்துறை இணை இயக்குனர் நடராஜன் தெரிவித்துள்ளார்.
அவரது அறிக்கை: பெரியகுளம், ஆண்டிபட்டி தாலுகாக்களில் குளிர் கால பருத்தி சாகுபடி செய்யப் பட்டுள்ளது. பயிர்கள் முதிர்ச்சி அடைந்து அறுவடை நிலையில் உள்ளன. இலைகள் சிவப்பு நிறமாக மாறி பயிர்கள் வாடும் நிலையில் உள்ளன. மக்னீசியம் நுண்ணூட்ட சத்து பற்றாக்குறையே இதற்கு காரணம். இதனை துவக்கத்திலே தவிர்க்க விவசாயத்துறையில் தயாரிக்கப்படும் பருத்தி நுண்ணூட்டச் சத்தை பயிர்களுக்கு இட வேண்டும். ஏக்கருக்கு ஐந்து கிலோ வீதம் நடுவதற்கு முன் மணல் கலந்தோ அல்லது எரு கலந்தோ நிலத்தில் சீராக தூவ வேண்டும். இதன் மூலம் நுண்ணூட்ட சத்து பற்றாக்குறை தவிர்க்கப்படும். மக்னீசியம் நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறை ஏற்பட்ட பின் மேலும் பரவாமல் தடுக்க வேண்டும்.
அதற்கு மக்னீசியம் சல்பேட் நுண்ணூட்டச் சத்து ஐந்து கிராம் மற்றும் யூரியா ஐந்து கிராமை ஒரு லிட்டர் தண்ணீரில் கலக்க வேண்டும். ஏக்கருக்கு 200 லிட்டர் வீதம் காலை நேரத்தில் பருத்தியில் நன்கு நனையும்படி கைத் தெளிப்பானை கொண்டு தெளிக்க வேண்டும். 15 நாட்கள் கழித்து மீண்டும் ஒரு முறை தெளித்தால் நல்ல மகசூல் கிடைக்கும்,"என தெரிவித்துள்ளார்.

### விதை கிராம திட்ட பயிற்சி முகாம்

மண்ணச்சநல்லூர்: மண்ணச்சநல்லூர் வட்டம் வெங்கங்குடி ஊராட்சி சமுதாய கூடத்தில் விதை கிராம திட்ட பயிற்சி முகாம் நடந்தது.ஒன்றிய சேர்மன் சீதா தலைமை வகித்தார். பயிற்சியில் வேளாண் உதவி இயக்குநர் சிவசங்கரன், விதை கிராமத் திட்டத்தின் பயன்கள், விதை நேர்த்தி, தரமான விதைகளை தேர்வு செய்வது, பயறு வகை சாகுபடியில் நவீன தொழில் நுட்பங்கள், அதிக மகசூல் தரும் செம்மை நெல் சாகுபடி முறைகள், மத்திய, மாநில அரசுகள் வழங்கும் மான்ய திட்டங்கள், நீர்ப்பாசன முறைகள், நீர்வழி உரமிடுதல் பற்றி விவசாயிகளுக்கு விளக்கினார்.பயிற்சி முகாமில் முன்னாள் சேர்மன் இளங்கோவன், விதைச்சான்று அலுவலர் எஸ்தர் பிரேமகுமாரி, வேளாண் அலுவலர் ரங்கராஜன், வேளாண் துணை அலுவலர் மனோகரன் ஆகியோர் பேசினர்.ஏற்பாடுகளை வேளாண் அலுவலர்கள் ஜீவானந்தம், லெட்சுமணன், மனோகரன் ஆகியோர் செய்திருந்தனர்.

**விதை கிராம திட்டபயிற்சி முகாம்**

தென்காசி:தேவிப்பட்டணத்தில் பயறு விதை கிராம திட்ட மூன்றாம் கட்ட பயிற்சி முகாம் நடந்தது.வாசுதேவநல்லூர் அருகே தேவிப்பட்டணத்தில் பயறு விதை கிராம திட்டம் 2009-10ன் படி மூன்றாம் கட்ட பயிற்சி முகாம் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள் தலைமை வகித்து, விதை பண்ணை அமைத்த வயல்களில் கலவன் நீக்கம் செய்து விதை ரகங்களை கண்டறிவது பற்றி செயல் விளக்கம் செய்து காட்டி, அறுவடை, விதை சேமிப்பு குறித்து விளக்கம் அளித்தார்.துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன் வரவேற்றார். வேளாண்மை அலுவலர் ராமசாமி பயறு வகை விதை சேமிப்பு, விதை பாத்திகளின் அவசியம் பற்றி பேசினார். விதைசான்று அலுவலர் வீரபுத்திரன் விதை அறுவடை, விதை சுத்தம், ஈரப்பதம், காய வைத்தல், விதை மாதிரி எடுத்தல், விதை சேமிப்பு, விதை சேமிப்பின் போது விதை பாதுகாப்பு குறித்து பேசினார்.விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. உதவி வேளாண்மை அலுவலர் செல்லையா நன்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் சம்சுதீன், பால்ராஜ், ஆறுமுகம், அண்ணாதுரை செய்திருந்தனர்.

**தென்னையில் குருத்தழுகல் நோய்**

திருநெல்வேலி:தென்னையில் குருத்தழுகல் நோய் கட்டுப்படுத்தும் முறை குறித்து ராதாபுரம் உதவி வேளாண்மை இயக்குநர் சத்தியஜோஸ் தெரிவித்துள்ளார்.ராதாபுரம் வட்டாரத்தில் தென்னை 800 ஹெக்டேர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தென்னையில் தற்போது இளங்கன்றுகள் முதல் 2 வருட கன்றுகள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் அறிகுறி குருத்து காய்ந்து பிடித்து இழுத்தால் குருத்து கையில் வந்து விடும்.இதனை கட்டுப்படுத்த பைட்டலான் 2 கிராம் 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து குருத்து மற்றும் வேர் பகுதி நனையும்படி எல்லா கன்றுகளிலும் பயிர் பாதுகாப்பு செய்து தென்னங்கன்றுகளை பாதுகாக்க வேண்டுமென ராதாபுரம் உதவி வேளாண்மை இயக்குநர் சத்தியஜோஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

**விதை கிராம பயிற்சி திட்டம் துவக்கம்**

திருப்போரூர் : ஆமூர் கிராமத்தில் விதை கிராம பயிற்சித் திட்டம் துவக்க விழா நடந்தது.திருப்போரூர் ஒன்றியக் குழுத் தலைவர் விஜயலட்சுமி கிருஷ்ணன் தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குனர் கனிங்ஸ்டன், திட்ட விளக்க உரையாற்றினார்.விதை சான்று அலுவலர் ரவி, நெல், மணிலா, சிறுதானிய விதைகள், விதை சான்று உதவியுடன் உற்பத்தி செய்தல் குறித்து விளக்கினார்.உதவி வேளாண்மை அலுவலர்கள் நெல்விதை நேர்த்தி, தென்னங்கன்று நடவு குறித்து செயல் விளக்கம் அளித்தனர்.விவசாயிகளுக்கு தென்னங்கன்றுகள், உயிர் உரங்கள் வழங்கப்பட்டன. ஆமூர் ஊராட்சித் தலைவர் குப்பன் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.வட்டார வேளாண்மை துணை அலுவலர் செல்வராஜ் வரவேற்றார். வேளாண்மை அலுவலர் பிரான்ஸிஸ்கா வித்யா நன்றி கூறினார்.

**வேலூரில் 1.65 லட்சம் கோழிக்கு தடுப்பூசி**

வேலூர்: வேலூர் மாவட்டத்தில் 1.65 லட்சம் கோழிகளுக்கு தடுப்பூசி போடப்படுகிறது. வேலூர் மாவட்டத்தில் ஆண்டு தோறும் கால் நடை பராமரிப்புத்துறை சார்பில் பிப்ரவரி மாதங்களில் இரு வார முகாம்கள் நடத்தி அனைத்து கோழிகளுக்கும் தடுப்பூசி போடப்படுகின்றது. அதே போல இந்தாண்டும் 1.65 லட்சம் கோழிகளுக்கு தடுப்பூசி போடும் பணி துவங்கியுள்ளது. இந்த பணிகள் கடந்த 2ம் தேதி துவங்கி வரும் 15ம் தேதி முடிகின்றது. இத்தகவலை கால் நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் ஆறுமுகம் தெரிவித்தார்.

### கர்னாடகா பொன்னி ரக நெல் மூடைகள் விலை குறைவால் விவசாயிகள் ஏமாற்றம்

சிவகாசி : கர்னாடகா பொன்னி ரக நெல்மூடை விலை குறைவால், கூட்டுறவு கடன் சங்கங்களில் நெல் மூடைகளை அடமானம் வைப்பதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
சிவகாசி தாலுகாவில் புதுக் கோட்டை, சித்தமநாயக்கன்பட்டி, ஈஞ்சாறு, நடுவபட்டி, வடபட்டி, நாரணாபுரம், திருத்தங்கல் ஆலமரத்துப்பட்டி உட்பட்ட கிராமங்களில் 700 ஏக்கரில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. இப் பகுதியில் ஜே.எல்.1789 என்ற சன்னரக நெல்லான கர்னாடகா பொன்னி 70 சதவீத அளவில் சாகுபடி செய்தனர். இதன் சாகுபடி காலம் 120 நாட்கள். இது தவிர 90 நாட்களில் பலன் தரக்கூடிய ஆடுதுறை 45 ரக நெல்லும் சாகுபடி செய்துள்ளனர்.இப்பகுதியில் 15 நாட்களாக நெல் அறுவடை துவங்கி விறுவிறுப்பாக நடந்து வருகிறது. கடந்த ஆண்டு 73 கிலோ எடையிலான கர்னாடகா பொன்னி நெல் மூடை 1200 ரூபாய்க்கு வியாபாரிகள் வாங்கினர். இந்த ஆண்டு மூடை 800 முதல் 850 ரூபாய்க்கு வாங்குகின்றனர். மூடைக்கு 400 ரூபாய் குறைவாக வாங்குகின்றனர்.
கடந்த ஆண்டு மழை போதுமான அளவில் இருந்ததால் ஏக்கருக்கு 9 ஆயிரம் கிலோ மகசூல் கிடைத்தது. இந்த ஆண்டு மழை பொழிவு குறைவாக இருந்ததால் 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் கிலோ வரைதான் மகசூல் கிடைத்துள்ளது.
கர்னாடகா பொன்னிக்கு இந்த ஆண்டும் நல்ல விலை கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த விவசாயிகளுக்கு விலை குறைவு, மகசூல் குறைவு போன்றவற்றால் ஏமாற்றம் அடைந்துள்ளனர். ஆனால் குறைந்த நாட்கள் பயிரிட்டு மகசூல் தரும் ஆடுதுரை 45 ரக நெல் விலை குறைவு இன்றி மூடை 800 ரூபாய்க்கு வியாபாரிகள் பெறுகின்றனர். அறுவடைக்கு ஆட்கள் கிடைக்காததால் இயந்திரம் மூலம் அறுவடை செய்யும் நடைமுறை அதிகரித் துள்ளது. இதனால் கடந்த ஆண்டு ஒரு மணிநேரத்திற்கு ஆயிரம் ரூபாய் கட்டணம் பெற்ற அறுவடை இயந்திர வாகனங்கள் இந்த ஆண்டு 1200 ரூபாய்கு வசூலிக்கின்றனர்.கர்னாடகா பொன்னிக்கு போதுமான விலை கிடைக்காததால் விவசாயிகள் பலர் நெல் மூடைகளை கூட்டுறவு அடமான சங்கங்களில் அடமானம் வைத்து மூட்டைக்கு 600 ரூபாய் பெறுகின்றனர். அதிகரிக்கும் போது மூடைகளை விற்பனை செய்து கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் உள்ளனர்.பொன்னி நெல் மூடை விலை உயரவில்லை. ஆனால் பொன்னி அரிசி கிலோ ரூ.35க்கு குறையவில்லை. சிவகாசி வட்டார விவசாயிகள் சங்க தலைவர் திருவேங்கட ராமானுஜம் கூறுகையில், வியாபாரிகளும், மில் உரிமையாளர்களும் கூட்டணி அமைத்து கர்னாடகா பொன்னிக்கு நெல் விலையை உயர்த்த விடாமல் விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு வாங்குகின்றனர். எனவே அரசு மூடைக்கு 900 ரூபாய் என விலை நிர்ணயம் செய்ய வேண்டும். கூட்டுறவு கடன் சங்கங்களில் நெல் மூடைக்கு தரும் தொகையினையும் அதிகரிக்க வேண்டும் என்றார்.

### தேங்காய் கொள்முதல் நிலையம் விவசாயிகள் மாநாட்டில் வலியுறுத்தல்

வத்திராயிருப்பு : வத்திராயிருப்பு பகுதியில் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைத்து அரசே தேங்காய்களை கொள்முதல் செய்ய வேண்டும் என விவசாய சங்க மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.
இந்திய கம்யூ., விவசாயிகள் சங்கத்தின் ஸ்ரீவி., தாலுகா மாநாடும், விளக்க பொதுக்கூட்டமும் மகாராஜபுரத்தில் நடந்தது. தாலுகா செயலாளர் ராமதாஸ் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் சீனிவாசன் முன்னிலை வகித்தார். மாவட்ட தலைவர் முருகேசன் வரவேற்றார். ராமசாமி எம்.எல்.ஏ., துவக்கினார். முன்னாள் எம்.பி., அழகிரிசாமி தீர்மானங்களை விளக்கி பேசினார். மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங் களாவது: ஸ்ரீவி., பகுதியில் தென்னை விவசாயம் அபரிதமாக இருந்தும் அதை உக்குவிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தேங்காய்களை வியாபாரிகள் சொல்லும் விலைக்கே விற்றாகவேண்டிய நிலை விவசாயிகளுக்கு உள்ளது. இதை தடுக்க விவசாயிகளுக்கு தேங்காய்க்கு உரிய விலை கிடைக்க அரசு தேங்காய் கொள்முதல் நிலையத்தை துவக்கி நேரடி கொள்முதல் செய்ய வேண்டும். கரும்பு விவசாயிகளை காக்க உரிய விலையும், உடனடி பணப்பட்டுவாடாவும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். விருதுநகர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர் நடந்த நிர்வாகிகள்

தேர்வில் தாலுகா தலைவராக சவுந்தரபாண்டியனும், துணை தலைவராக கருப்பன், செயலாளராக மாரியப்பன், துணை செயலாளராக வெங்கடேஷ், பொருளாளராக திவாகர் தேர்வு செய்யப்பட்டனர். கோவிந்தன் நன்றி கூறினார்.

### ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் கலெக்டர் அலுவலகம் வேண்டாம்: விவசாயிகள் முறையீடு

திருப்பூர் : "திருப்பூர் ஒழுங்முறை விற்பனைக்கூட வளாகம், விவசாய பயன்பாட்டுக்காக மட்டுமே இருக்க வேண்டும். இங்கு, நிரந்தர கலெக்டர் அலுவலக வளாகம் அமைக்கக்கூடாது' என, கலெக்டரிடம் விவசாயிகள் தெரிவித்தனர்.திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் முறையீட்டுக்கூட்டம், கலெக்டர் சமயமூர்த்தி தலைமையில் நேற்று நடந்தது. கடந்த முறை நடந்த கூட்டங்களில் வைக்கப்பட்ட கோரிக்கைகளின் மீதான விளக்கம் அளிக்கப்பட்டது."ஒற்றைக்கல் கால்வாயில் இருந்து 10 மீட்டர் தூரத்துக்குள் போர்வெல் அமைக்கக்கூடாது, என்ற விதிமுறையை தளர்த்த வேண்டும்' என கோரிக்கை விடுக்கப்பட்டு இருந்தது."இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை சில மணி நேரம் வரும் தண்ணீருக் காக, விவசாயிகளின் பட்டா நிலத்தில் உள்ள சிறு கால்வாயை காரணம் காட்டி, போர்வெல்லுக்கு அனுமதி மறுக்கக்கூடாது' என, விவசாயிகள் வாதிட்டனர். இதுகுறித்து அரசுக்கு பரிந்துரைக்க அதிகாரிகளுக்கு, கலெக்டர் உத்தரவிட்டார்.ஈட்டிவீரம்பாளையத்தை சேர்ந்த 81 வயதான விவசாயி, பலமுறை விண்ணப்பித்தும் மின் இணைப்பு வழங்கவில்லை என முறையிட்டார். உரிய விளக்கம் கொடுக்க சம்பந்தப் பட்ட மின்வாரிய அதிகாரியிடம் கலெக்டர் கேட்டுக்கொண்டார். ஆனால், கண்காணிப்பு பொறியாளரும், அவிநாசி மின்வாரிய அதிகாரிகளும் வரவில்லை. கண்காணிப்பு பொறியாளரின் பிரதிநிதியாக, திருப் பூர் கோட்ட செயற்பொறியாளர் வந்திருந்தார். வர் "இதுகுறித்து தெரியாது; மனு வரவில்லை' என்றதும், கலெக்டர் "டென்ஷன்' ஆனார்."ஆர்.டி.ஓ., தலைமையில் நடந்த கூட்டத்தில் மனு கொடுத்திருக் காங்க; 81 வயசு மூத்த விவசாயி. குறைந்தபட்சம் அம்மனு என்ன என்று கூட தெரியாதா? உங்க அலுவலகத்துல இருந்து அன்னிக்கு, யாரும் கூட்டத்துக்கு வரவில்லை. அதற்கு கூட வராமல் என்ன செய்கிறீர்கள். இந்த நிலை தொடர்ந்தால், உங்கள் வாரிய சேர்மனிடம் புகார் தெரிவிக்க வேண்டியிருக்கும். அவரின் வயதுக்காவது மரியாதை கொடுங்கள். இம்மனு மீது, உரிய விளக்கம் அளிக்க வேண்டியவரை வரச் சொல்லுங்கள்,' என கலெக்டர் உத்தரவிட்டார். அதன்பின், அவிநாசி மின்வாரிய அதிகாரிகள் வந்து விளக்கம் அளித்தனர்."தர்பூசணி உள்ளிட்ட விதைகள் தரம் குறைந்தவையாகவும், முளைப்புத்திறன் இல்லாமலும் தாராபுரம் பகுதியில் விற்பனை செய்யப்படுகின்றன,' என மனு கொடுக்கப்பட்டு இருந்தது.இதன் மீது விளக்கமளித்து பேசிய விதைசான்று துறை அதிகாரிகள், "அப்பகுதியில் உரிய ஆய்வு செய்து, தரமிக்கவை மட்டுமே விற்பனை செய்யப்படுகின்றனவா என கண்காணிக்கப்பட்டது. 1,070 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. 54 மாதிரிகள் முளைப்புத்திறன் அற்றவை என தெரியவந்தது. சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மீது, கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது,' என்றனர்."தாராபுரம் பகுதியில் பழைய மோட்டாரை மாற்ற, மானிய விலையில் புது மோட்டார் பொருத்தும் திட்டத்தை, வேளாண் பொறியியல் துறை அதிகாரிகள் செயல்படுத்தவில்லை,' என புகார் எழுந்தது. குடிமங்கலம் பகுதியில் இதுகுறித்த விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை இல்லை எனவும் புகார் தெரிவிக்கப்பட்டது. இதை விசாரித்த கலெக்டர், தாராபுரம் கோட்டத்தில் உடனடியாக அத்திட்டத்தை செயல்படுத்த உத்தரவிட்டார். ""மார்ச் 31க்குள் திட்டத்தின் இறுதி இலக்கான ஒன்பது லட்சம் ரூபாய் எட்டப்படும். குடிமங்கலம் பகுதி, உடுமலை வருவாய் கோட்டத்தில் வருகிறது.அங்கு 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. தற்போது, தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு அனைவருக்கும் வழங்கப்படும். அடுத்த நிதி ஒதுக்கீட்டில் ஏப்., மாதத்துக்கு பின் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்,'' என்றார்."விவசாய நிலங்களில் செயல்படும் கோழிப்பண்ணைகளுக்கு, இலவச மின்சாரத்தை பயன்படுத்தி நீர் இறைக்க கூடாது, என மின்வாரியம் கட்டுப்பாடு விதித்துள்ளது. கோழிப் பண்ணைகளை கால்நடை என்ற வரம்புக்குள் கொண்டு வந்து, விதிவிலக்கு அளிக்க வேண்டும்,' என விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டு இருந்தது."அரசு விதிமுறைப்படி, நடவடிக்கை எடுக்க மின்வாரியம் உத்தரவிட்டுள்ளது. தற்போது, கோழிப் பண்ணைகளுக்கு இலவச மின்சாரத்தை பயன்படுத்தி, நீர் எடுப்பது குறித்து மின்வாரிய தலைமையகம் அறிக்கை கேட்டுள்ளது. வழங்கலாம் என பரிந்துரைக்க உள்ளோம்' என, மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.நடப்பு வாரத்தில் விவசாயிகள் தெரிவித்த புகார்:உடுமலை பூலாங்கிணறு பகுதியில், தொடக்க

வேளாண் கூட்டுறவு வங்கிகளில் ரசாயன உரம் போதுமான அளவு இருப்பு இல்லை. பி.ஏ.பி., முதல் மண்டல பாசனம் நடப்பதால், போதிய உரம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கடைகளில் கூடுதல் விலைக்கு உர விற்பனை நடக்கிறது.ஆண்டிபாளையம், ராயபுரம் பகுதியில் பொதுசுத்திகரிப்பு மற்றும் சாய ஆலைகளில் இருந்து முழுமையாக சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் வெளியேறுகிறது. ஜீரோ டிஸ்சார்ஜ் முறை பின்பற்றப்படுவதில்லை.கொப்பரை தேங்காய் உற்பத்தியாளர்கள் அனைவரும் விவசாயிகள் இல்லை. பெரும்பாலும் வியாபாரிகள். இதனால், கொப்பரை கொள்முதல் திட்டத்தால் பயன் இல்லை. எனவே, கொப்பரைத் தேங்காயை கொள்முதல் செய்ய வேண்டும். கேரளாவில் இதுபோன்று செய்கிறார்கள். மத்திய அரசும் சமீபத்தில், கொப்பரைத் தேங்காய் கிலோ 12 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படும் என அறிவித்தது. இத்திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளதா என தெரிவிக்க வேண்டும்.கொப்பரையை கொள்முதல் செய்வதிலும், கழித்து விடுவதை அங்கேயே ஏலம் விட நடவடிக்கை தேவை. எஞ்சியவற்றை வீட்டுக்கு கொண்டு வர விவசாயிகள் சிரமப்படுகின்றனர்.மக்காச்சோளம் கொள்முதல் செய்வதில், சில நிறுவனங்கள் "சிண்டிகேட்' அமைத்து செயல்படுகின்றன. அதை தடுத்து, உரிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மாட்டுத்தீவன விலை , கட்டுப்பாட்டில் இல்லாமல் உயர்த்தப்படுவதை தடுக்க வேண்டும்.இவ்வாறு, விவசாயிகள் தெரிவித்தனர்.கலெக்டர் விளக்கமளித்து பேசுகையில், ""தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் உரம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அங்கு அதிகாரிகள் திடீர் ரெய்டு நடத்துங்கள். கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதை தடுக்க, உர விற்பனையாளர்கள் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள். கழிவு நீர் சுத்திகரிக்கப்படுவதை மாசுக்கட்டுப்பாடு வாரியம் கண்காணிக்க வேண்டும்.கொப்பரை திட்டம் பற்றி விபரங்கள் சேகரித்து, அடுத்த கூட்டத்தில் விளக்க வேண்டும். கால்நடை தீவனங்கள் அதிகபட்ச விலையை விட கூடுதலாக விற்பனை செய்யக்கூடாது. மூட்டையில் எம்.ஆர்.பி., குறிப்பிடப்படாவிட்டால், சம்பந்தப்பட்ட ஆலைக்கு "சீல்' வைக்கப்படும்.இவ்வாறு, கலெக்டர் தெரிவித்தார்.தமிழ்நாடு மாநில விவசாயிகள் சங்கம் சார்பில் கொடுக்கப்பட்ட மனு:தளி தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் 82 லட்சம் ரூபாய் மட்டுமே பயிர்க்கடன் இலக்காக உள்ளது. அதிகபரப்பு காரணமாக, இது போதவில்லை. கூடுதலாக 50 லட்சம் ரூபாய் ஒதுக்க வேண்டும். தீபாலபட்டி தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியின் கீழ், தீபாலபட்டி, ஜிலோபிநாயக்கன்பாளையம், மொடக்குபட்டி பகுதிகளில், ரேஷன்கடை திறக்க அனுமதி வேண்டும்.மொடக்குபட்டியில் இருந்து திருமூர்த்தி மலை செல்லும் சாலையை செப்பனிட வேண்டும். கால்நடை தீவனம் தயாரிக்க, அரவை ஆலை அமைக்க பண்ணை மகளிருக்கு, 50 சதவீத மானியத்தில் கடன் வழங்க வேண்டும். ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில், விவசாய பணிகளை இணைக்க வேண்டும்.இவ்வாறு, மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.கலெக்டர் அலுவலகம் அமைவது தொடர்பாக, கட்சிசார்பற்ற விவசாயிகள் சங்க தலைவர் பழனிசாமி, உ.உ.க., மாநில ஆலோசகர் பாலு உள்ளிட்டோர் பேசியதாவது: விவசாயிகளுக்காக ஒதுக்கப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தை, வேறு பயன்பாட்டுக்கு ஒதுக்கக்கூடாது. கலெக்டர் அலுவலகத்தை 20 கி.மீ., தள்ளி அமைத்து விடுங்கள். தற்போதே இப்பகுதி வணிக வளாகம் போல் மாற்றப்பட்டு விட்டது.விவசாயிகளின் நலன் கருதி 1937ம் ஆண்டு இந்த இடம் ஒதுக்கப்பட்டது. ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகம் மற்றும் கூட்டுறவு பண்டகசாலை, வேளாண் தொடர்பான பணிகளுக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும், என்றனர். இதே கருத்தையே மற்ற விவசாயிகளும் ஆமோதித்தனர்.

## இளநீர் பருகும் பழக்கம் குறைகிறது

திருப்பூர் : "இளநீர் பருகும் பழக்கம் இளைய தலைமுறையிடம் குறைந்து வருகிறது' என இளநீர் வியாபாரி கவலையுடன் கூறினார்.நவீனயுகமாகி வரும் இச்சமுதாயத்தில், மனிதனின் நடைமுறையிலும் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. முதியோர் பின்பற்றிய முறைகள், இன்றைய இளைய தலைமுறையினரிடம் இல்லை. மனிதன் 100 ஆண்டுகள் உயிர் வாழ்ந்த காலம் மறைந்து, 70 ஆண்டுகள் வாழ்வதே அதிகபட்சம் என்ற சூழ்நிலைக்கு உலகம் மாறியுள்ளது.அக்காலத்தில் வெயில் காலம் துவங்கினால் இளநீர் உட்பட இயற்கை பானங்களையே பருகுவது வழக்கம். உடலுக்கு நன்மை தரக்கூடிய, இயற்கையின் வரப்பிரசாதமான இளநீரை விரும்பி, பருகுவர். ஆனால், இன்றைய இளைய தலைமுறையினரிடம் இளநீர் பருகும் பழக்கம் மிகவும் குறைந்துள்ளது. உடல் வெப்பம்

தணித்தல், நோய் எதிர்ப்புச்சக்தி அளித்தல், நீர்ச்சத்து இழப்புகளை தடுத்தல், புரோட்டின் மற்றும் வைட்டமின் சத்துகளை உள்ளடக்கிய இளநீரை பருகும் இளையோர் கூட்டம் குறைந்து விட்டது.இளநீர் வியாபாரி பழனிசாமி கூறியதாவது:இளநீர் பருகும் பழக்கம் 30 வயதுக்கு மேற்பட் டோரிடமே உள்ளது. 30 வயதுக்கு உட்பட்டவர்கள், குடும்பத்துடன், பெரியவர்களுடன் சாப்பிடும் போது மட்டுமே இளநீர் பருகுகின்றனர். வெயில் என்றால், ஏதாவது கடைகளில் குளிர் பானங்களை விரும்பி குடிக்கின்றனர். இளநீரின் மகத்துவத்தை குழந்தைகளுக்கு பெற்றோர் எடுத்துக்கூற வேண்டும்.ஒரு இளநீர் 12 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக, விலையில் அதிக மாற்றம் இல்லை. இந்தாண்டு கோடை காலத்தில் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது. மாசி மாதம் துவங்கிய பின்பே இளநீர் விற்பனை சூடுபிடிக்கும், என்றார்.

**மானிய விலையில் பண்ணை கருவி**

திருப்பூர் : வேளாண் பொறியியல் துறை சார்பில், திருப்பூரில் 14 பயனாளிகளுக்கு மானிய விலையில் பண்ணை இயந்திரங்கள் வழங்கப்பட்டன.வேளாண் பொறியியல் துறை சார்பில், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில், விவசாய பயன்பாட்டுக்கான பண்ணை இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.திருப்பூர் மாவட்டத்துக்கு உட்பட்ட 14 விவசாயிகளுக்கு பண்ணை இயந்திரங்கள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது.கலெக்டர் அலுவலகத்தில் நடந்த அந்நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு பண்ணை இயந்திரங்களை கலெக்டர் சமயமூர்த்தி வழங்கினார்.மினி டிராக்டர் வடிவிலான நான்கு சக்கரத்துடன் கூடிய களை எடுப்பான் கருவி ஐந்து பயனாளிகளுக்கு வழங்கப் பட்டது; ஒரு இயந்திரத்தின் மதிப்பு இரண்டு லட்சத்து 69 ஆயிரத்து 880 ரூபாய்; மானியம் தலா ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாய்.இரு சக்கரங்களுடன் கூடிய களை எடுப்பான் ஒரு பயனாளிக்கு, மருந்து தெளிக்கும் தூவுவான் (பாகர்) ஒரு பயனாளிக்கு, இரண்டு பயனாளிகளுக்கு களை அறுப்பான், ஒன்பது பயனாளிக்கு ஆறு லட்சத்து 91 ஆயிரத்து 578 ரூபாய் மானிய உதவியில் பண்ணை இயந்திரங்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில், செயற்பொறியாளர் ஜெகநாதன், உதவி செயற்பொறியாளர் துரைராஜ், உதவிப்பொறியாளர் சந்திரசேகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

---

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

***நடப்பு ஆண்டில் வர்த்தகம் செழிக்கும் முன்னேற்றப் பாதையில் தேயிலை உற்பத்தி துறை***

*சுதானுகா கோசல்*
*கொல்கத்தா*
*நடப்பு ஆண்டில், சர்வதேச அளவில் தேயிலை பற்றாக்குறை 5.36 கோடி கிலோவாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே இந்திய தேயிலை உற்பத்தி துறைக்கு பிரகாசமான வர்த்தக வாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச சந்தையில் மட்டுமின்றி உள்நாட்டிலும் தேயிலைக்கு நல்ல விலை கிடைக்க வாய்ப்புள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.*
*இது குறித்து கொல்கத்தா தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தின் செயலாளர் ஜே.கல்யாணசுந்தரம் கூறும்போது, "நடப்பு ஆண்டில் ஒரு கிலோ தேயிலைக்கு ரூ.20 அதிகமாக கிடைக்க வாய்ப்புள்ளது. பற்றாக்குறையே இல்லையென்றால் கூட தரமான தேயிலையின் விலை அதிகமாகவே இருக்கும்" என்று தெரிவித்தார்.*
*பயன்பாடு*
*கடந்த 2008–ஆம் ஆண்டில் ஒரு கிலோ தேயிலையின் விலை, சராசரியாக ரூ.86–ஆக இருந்தது. இது, சென்ற 2009–ஆம் ஆண்டில் 105–ஆக உயர்ந்தது. உள்நாட்டில் பயன்பாடு அதிகரித்து வரும் நிலையில், நடப்பு ஆண்டிலும் தேயிலை விலை குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.*
*இந்தியாவில் தேயிலை பயன்பாடு ஆண்டுக்கு 3–3.5 சதவீதம் என்ற அளவில் அதிகரித்து வருகிறது. பயன்பாடு தொடர்ந்து உயர்ந்து வரும் நிலையில், தேயிலை ஏற்றுமதி, சென்ற ஆண்டில் சற்று சரிவடைந்துள்ளது. 2008–ஆம் ஆண்டில் நாட்டின் தேயிலை ஏற்றுமதி 20.31 கோடி கிலோவாக இருந்தது. இது, 2009–ஆம் ஆண்டில் 19.15 கோடி கிலோவாக குறைந்துள்ளது. இந்நிலையில், நடப்பு ஆண்டில் தேயிலை ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய தொழில் மற்றும் வர்த்தக துறைக்கான ராஜாங்க அமைச்சர் ஜோதிராதித்யா சிந்தியா தெரிவித்துள்ளார்.*
*கென்யா*
*இந்தியாவில் தேயிலை பயன்பாடு மிகவும் அதிகமாக உள்ளதால் கென்யா நாட்டிற்கு இணையான அளவில்*

ஏற்றுமதி செய்ய முடிவதில்லை. தேயிலை உற்பத்தியில் முன்னணி நாடுகளுள் ஒன்றான கென்யா, அதன் மொத்த உற்பத்தியில் 95 சதவீதத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.
நம் நாட்டில் தேயிலை உற்பத்தியில் அசாம் மாநிலம் முதலிடத்தில் உள்ளது. நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தியில் இம்மாநிலத்தின் பங்களிப்பு 50 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது. தென் மாநிலங்களில் கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகியவை தேயிலை உற்பத்தியில் முன்னிலையில் உள்ளன.

## ரபி பருவ வேளாண் உற்பத்தி சரிவடையும் என மதிப்பீடு

பல்லவி முல்லை
இக்கனாமிக் டைம்ஸ் ஆய்வு பிரிவு
நடப்பு ரபி பருவத்தில் (அக்டோபர்–மார்ச்) முந்தைய மதிப்பீட்டுக்கு மாறாக வேளாண் உற்பத்தி சரிவடையும் என அண்மைக் கால ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
வேளாண் அமைச்சகம்
மத்திய வேளாண் அமைச்சகம், சில மாதங்களுக்கு முன்னர், உணவு தானியங்களின் உற்பத்தி, சென்ற 2008–09–ஆம் ஆண்டு ரபி பருவத்தைக் காட்டிலும் 8 சதவீதம் அல்லது ஒரு கோடி டன் அதிகரிக்கும் என மதிப்பிட்டிருந்தது. இதனையடுத்து மத்திய புள்ளியியல் அமைப்பு, நடப்பு நிதி ஆண்டில், கரீஃப் பருவ (ஜூன்–அக்டோபர்) உற்பத்தி 16 சதவீதம் குறைந்துள்ள நிலையிலும், ஒட்டுமொத்த அளவில் வேளாண் உற்பத்தியில் 0.2 சதவீத அளவிற்கே சரிவு ஏற்படும் என தெரிவித்தது.
அதே சமயம் நடப்பு ரபி பருவத்தில் பயிரிடும் நிலப்பரப்பு, விதைப்பு பணிகள் குறித்த விவரங்கள் திருப்தி அளிப்பதாக இல்லை. இந்நிலையில் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக உணவு தானியங்கள் உற்பத்தி குறையும் நிலை உருவாகியுள்ளது. ரபி பருவத்தில், பிப்ரவரி 4–ந் தேதி வரையில் 6.52 கோடி ஹெக்டேர் நிலப்பரப்பில் விதைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
10.77 கோடி டன்
இது, சென்ற ரபி பருவத்தைக் காட்டிலும் 0.8 சதவீதம் குறைவாகும். பயிரிடும் நிலப்பரப்பு குறைந்துள்ள நிலையில், குறைந்த அளவு நிலத்தில் அதிக மகசூல் பெறும் வகையில் நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டால் தவிர உற்பத்தியில் சரிவு ஏற்படுவது தவிர்க்க இயலாதது என இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.
ஆக, ரபி பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி 10.77 கோடி டன்னாக இருக்கும் என தற்போதைய மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இது, சென்ற 2008–09–ஆம் ஆண்டு ரபி பருவ உற்பத்தியைக் காட்டிலும் 7.3 சதவீதம் குறைவாகும். நடப்பு பருவத்தில், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி சுமார் 92 லட்சம் டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனையும் சேர்த்தால், ஒட்டுமொத்த அளவில் வேளாண் உற்பத்தி 11.69 கோடி டன்னாக இருக்கும்.
கோதுமை சாகுபடியை பொறுத்தவரை, இதுவரை பருவ நிலை மிகவும் சாதகமாக உள்ளதாக தெரிகிறது. பருப்பு வகைகள் சாகுபடி குறித்த புள்ளிவிவரங்களும் ஓரளவு திருப்தி அளிப்பதாக உள்ளன. என்றாலும் 30–40 லட்சம் டன் பருப்பு வகைகள் இறக்குமதி செய்ய வேண்டிய அளவுக்கு உள்நாட்டில் தேவை உள்ளது.

## யூரியா விலையை உயர்த்த மத்திய அரசு ஆலோசனை

பிரபா ஜெகன்னாதன்
புதுடெல்லி
பத்து ஆண்டுகளுக்குப் பிறகு யூரியா விலையை உயர்த்த மத்திய அரசு மீண்டும் ஆலோசித்து வருகிறது. தற்போதைய உரக் கொள்கை வரும் மார்ச் மாதம் 31–ந் தேதி வரை அமலில் இருக்கும். அதாவது ஏப்ரல் 1–ந் தேதி அன்று புதிய உரக் கொள்கை வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
இதில், யூரியா விலையை உயர்த்துவதற்கு வகை செய்யப்படலாம் என்று தெரிகிறது. யூரியா உரம் விலை 10 சதவீதம் வரையிலும், டி.ஏ.பி. மற்றும் எம்.ஓ.பி. ஆகிய உரங்களின் விலை 5 சதவீதமும் உயர்த்தப்படலாம் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.
அதே சமயம் உர உற்பத்தியில் ஈடுபட்டு வரும் நிறுவனங்கள் யூரியா விலை 30 சதவீதம் உயர்த்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளதாக கூறப்படுகிறது. தற்போது ஒரு டன் யூரியா விலை ரூ.4,830–ஆக உள்ளது. ஒரு டன் டி.ஏ.பி. மற்றும் எம்.ஓ.பி. ஆகிய உரங்களின் விலை முறையே ரூ.9,350 மற்றும் ரூ.4,455 என்ற அளவில் உள்ளது.

***ஜனவரி மாதத்தில் 11.5 சதவீதம் வளர்ச்சி***

***ஏற்றுமதி ரூ.67,270 கோடியாக உயர்வு***

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*நாட்டின் ஏற்றுமதி தொடர்ந்து மூன்றாவது மாதமாக, சென்ற ஜனவரி மாதத்திலும் வளர்ச்சி கண்டுள்ளது. அம்மாதத்தில், 1,434 கோடி டாலர் (ரூ.67,270 கோடி) மதிப்பிற்கு ஏற்றுமதி மேற்கொள்ளப்பட்டுள்ளது.இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தை விட 11.50 சதவீதம் அதிகமாகும். சென்ற ஆண்டு ஜனவரி மாதத்தில், நாட்டின் ஏற்றுமதி 1,290 கோடி டாலர் (ரூ.60,630 கோடி) மதிப்பிற்கு இருந்தது.*
*தேவைப்பாடு*
*சர்வதேச அளவில் ஏற்பட்ட பொருளாதார சுணக்கநிலையால், சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் வரையிலான 13 மாதங்களில் நாட்டின் ஏற்றுமதி தொடர்ந்து சரிவடைந்து வந்தது. இந்த நிலையில், உலகின் பல்வேறு முக்கிய நாடுகளில் தேவைப்பாடு அதிகரித்து வருவதையடுத்து, நாட்டின் ஏற்றுமதியில் வளர்ச்சி ஏற்படத் தொடங்கியுள்ளது. சென்ற ஆண்டு நவம்பர் மாதத்தில் நாட்டின் ஏற்றுமதி 18.2 சதவீத அளவிற்கும், டிசம்பர் மாதத்தில் 9.3 சதவீத அளவிற்கும் வளர்ச்சி கண்டிருந்தது என மத்திய தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா தெரிவித்தார்.*
*கடல் உணவு பொருள்கள்*
*நடப்பு ஆண்டு ஜனவரி மாதத்தில், பழங்கள், காய்கறிகள், கடல் உணவு பொருள்கள், புகையிலை மற்றும் நூலிழைகள் ஏற்றுமதி சிறப்பான அளவில் அதிகரித்திருந்தது. தேயிலை, காபி, நவரத்தினங்கள், ஆபரணங்கள், மருந்து, பிளாஸ்டிக் ஆகியவற்றின் ஏற்றுமதியிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.*
*அதேசமயம், பொறியியல், ஜவுளி, சணல், மிதியடிகள், கைவினை பொருள்கள் மற்றும் தோல் ஏற்றுமதியில் தொடர்ந்து சரிவுநிலை காணப்படுகிறது என சர்மா கூறினார்.*
*உலக அளவில் பல நாடுகள் வளர்ச்சிப் பாதைக்கு வந்துள்ளன என்றாலும், ஏற்றுமதி வளர்ச்சியில் 2008–ஆம் செப்டம்பருக்கு முன்பு இருந்த நிலை இன்னும் எட்டப்படவில்லை என சர்மா குறிப்பிட்டார்.*
*10 மாதங்களில்...*
*நடப்பு நிதி ஆண்டின், ஏப்ரல் முதல் ஜனவரி வரையிலான 10 மாத காலத்தில், நாட்டின் ஏற்றுமதி 13,300 கோடி டாலராக (ரூ.6,25,100 கோடி) உள்ளது. இது, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் 14,420 கோடி டாலராக (ரூ.6,77,740 கோடி) இருந்தது.*
*மத்திய அரசு, நடப்பு 2010–11–ஆம் முழு நிதி ஆண்டில், 20,000 கோடி டாலர் (ரூ.9,40,000 கோடி) மதிப்பிற்கு ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது.*

**இறக்குமதி செய்யப்பட்ட**

**பருப்பு வகைகள் விற்பனையில் பொது துறை நிறுவனங்கள் தீவிரம்**

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பருப்பு வகைகளை விற்பனை செய்வதில் பொதுத் துறை நிறுவனங்கள் தீவிரமாக உள்ளன.

விலை அதிகரிப்பு

உள்நாட்டில் பருப்பு வகைகளின் விலை மிகவும் அதிகரித்துள்ளது. இதனை கட்டுக்குள் கொண்டு வரும் வகையில், பொதுத் துறையைச் சேர்ந்த எஸ்.டி.சி., பி.இ.சி., நாஃபெட் மற்றும் எம்.எம்.டி.சி. ஆகிய நிறுவனங்கள், துவரம் பருப்பு, உளுந்து, கொண்டைகடலை, பட்டாணி உள்ளிட்ட பருப்பு வகைகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து வருகின்றன.

உள்நாட்டில், போதிய அளவிற்கு உற்பத்தி இல்லாததால், இவற்றின் விலை மிகவும் அதிகரித்துள்ளது. குறிப்பாக, நம் நாட்டில் ஆண்டுக்கு 1.70–1.80 கோடி டன் அளவிற்கு பருப்புகளுக்கு தேவைப்பாடு உள்ளது. அதேசமயம், உள்நாட்டில், இவற்றின் உற்பத்தி 1.40–1.50 கோடி டன் என்ற அளவிலேயே உள்ளது. உற்பத்தியை விட தேவைப்பாடு அதிகரித்துள்ளதால், விலை மிகவும் அதிகரித்துள்ளது.

இந்த வகையில், பொதுத் துறையைச் சேர்ந்த எம்.எம்.டி.சி. நிறுவனம், வெளிநாடுகளில் இருந்து கொள்முதல் செய்து வைத்துள்ள 6,000 டன் பருப்பு வகைகளை நடப்பு பிப்ரவரி மாத இறுதிக்குள் விற்பனை செய்யும் வகையில் ஏலப்புள்ளிகளை கோரி உள்ளது.

ஆஸ்திரேலியா

எம்.எம்.டி.சி.யை போன்று, இதர பொதுத்துறை நிறுவனங்களும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து வைத்துள்ள பருப்பு வகைகளை இம்மாத இறுதிக்குள் விற்பனை செய்யும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

மேற்கண்ட பொதுத் துறை நிறுவனங்கள், ஆஸ்திரேலியா, மியான்மர், கனடா, தான்சானியா, மலாவி மற்றும் மொசாம்பிக் ஆகிய நாடுகளில் இருந்து அதிக அளவில் பருப்பு வகைகளை இறக்குமதி செய்து வைத்துள்ளன.